GOKULAM


ஏப்ரல் 2009 • 80 பக்கங்கள் • விலை ரூ.8/-

கோகுலம்

குழந்தைகளின் குதூகலம்!



ஜோக் போட்டி!



6 படக்கதைகள்!



சின்னச் சின்ன ஆசை...

கோகுலம் சிறுவர் சங்கம்

உறுப்பினர்கள்


951


952


953


954


955


956


957


958


959


960


961



962


963


964


965


966


967


968


969


970


971


972


973


974


975

தொடர்ச்சி 3 ஆம் அட்டையில்...

கோகுலம்

ஏப்ரல் 2009, மலர் : 27 இதழ் : 3

கல்கி
நிறுவன வெளியீடு
தரம் நிரந்தரம்

உயிர்களிடத்தில் அன்பு வேணும் – தெய்வம்
உண்மையென்று தானறிதல் வேணும் – பாரதியார்



உறுப்பினர்களுக்கான ஜோக் போட்டி!

விவரங்கள் அடுத்த பக்கம்...

ஜாம்பவானாக்கும் ஜாலி



டியர் குட்டீஸ்...

'கொலம்பஸ் கொலம்பஸ் விட்டாச்சு லீவு; கொண்டாட கண்டுபிடிச்சு கொண்டா ஒரு தீவு!' என்று ஹூட்டி செய்யும் மூடுக்கு வந்திருப்பீர்கள்.

எந்த ஊருக்குப் போகலாம்; அங்கு என்னவெல்லாம் விளையாடலாம்... என்று உங்கள் மனத்தில் கற்பனை பொங்கிக் கொண்டிருக்கும்.

அதில் தவறு இல்லைதான். உற்சாகமான பேச்சும், சிரிப்பும், விளையாட்டும் உடலுக்கு மட்டுமல்ல; மனதுக்கும் ஆரோக்கியம் தரவல்லது.

அதேசமயத்தில், புதிதாக ஒன்றைக் கற்றுக் கொள்ளவும் அருமையான தருணம் இது என்பதை நினைவில் கொள்ளுங்கள்.

புத்தகம் வாசிப்பது, இசைக் கருவிகளில் பயிற்சி எடுத்துக் கொள்வது, நீச்சல் கற்றுக் கொள்வது... இப்படி எதுவாக வேண்டுமானாலும் இருக்கலாம்.

உங்கள் உடலுக்கும், மனதுக்கும் புத்துணர்ச்சி தரக்கூடியதாக அது இருக்க

போட்டி விதிகள் :

டியர் குட்டீஸ்...

- முன்பக்கத்தில் உள்ள படத்துக்கு ஏற்ற விதத்தில் 'குபீர்' ஜோக்குகளை எழுதி அனுப்புங்கள்.
- கண்டிப்பாக உறுப்பினர் எண்ணை குறிப்பிட வேண்டும்.
- சிறுவர் சங்க உறுப்பினர்கள் மட்டுமே இதில் பங்கேற்கலாம்.
- முகவரி கூப்பனை ஒட்டி அனுப்ப வேண்டும்.
- ஆசிரியர் தீர்ப்பே இறுதியானது.
- முடிவு தேதி: 10.5.2009

ஜோக் போட்டி,
கோகுலம்,
47-NP. ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 32

வேண்டும். இவற்றோடு இன்னொரு சின்ன விஷயம்: விடுமுறை உங்களுக்குத் தான். உங்கள் பெற்றோருக்கு இல்லை. எனவே, சின்னச் சின்ன வீட்டு வேலைகளைச் செய்யலாம்.



தூங்கி எழுந்தவுடன் பாயைச் சுருட்டி வைப்பது: துவைத்த துணிகளை உலர்த்துவது... இப்படி சிறிய வேலைகளைச் செய்து அம்மாவுக்கு உதவலாம்.

விளையாட்டும் வேடிக்கையும் உங்களுக்கு எவ்வளவு சந்தோஷம் தருமோ, அதே அளவு சந்தோஷத்தை நீங்கள் செய்யும் சிறிய உதவிகளின் மூலம் அம்மாவும் அனுபவிப்பார்கள்.

வளர்ந்த நிலையில் நம்முடைய தகுதிகளை நிர்ணயிக்கவும் உறவுகளைப் பலப்படுத்தவும் இந்தப் பயிற்சி உதவும். திறமையும் நற்குணமும் பொருந்தினால், வெற்றிகளே தொடர்ந்து அணிவகுக்கும்.

அப்படியொரு ஜாம்பவனாக உங்களை இந்த ஹா(ஜா)லிடே உருவாக்கட்டும்!

அன்புடன்

கோகு

கோகுலம்

பரதன் பப்ளிகேஷன்ஸ்
பிரைவேட் லிமிடெட்டிற்காக
பரதன் அச்சகத்தில்
அச்சிட்டு வெளியிடுபவர்:
லக்ஷ்மி நடராஜன்

கல்கி பில்டிங்க்ஸ்,
47-N.P., ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 32

ஆசிரியர் :
சீதா ரவி

வடிவமைப்பு :
எஸ்.ஸ்டீஃபன், எம்.மோகன், ச.கார்த்திகேயன், பா.கோபால்

தொலைபேசி :
044 - 4343 8888
(30 lines)

தொலைநகல் :
044 - 4343 8899

மின்னஞ்சல்:
ஆசிரியர் குழு :
tamilgokulam@kalkiweekly.com
விளம்பரப் பிரிவு:
marketing@kalkiweekly.com
சந்தா பிரிவு :
subscription@kalkiweekly.com
பிற தகவல்களுக்கு :
info@kalkiweekly.com

சந்தா விவரம்:
உள்நாடு :
ஒரு வருடம் : ரூ. 96/-
வெளிநாடு (விமானத்தபால்) :
ஒரு வருடம் : ரூ. 1000/-

Bharathan Publications
Private Limited,
Kalki Buildings,
47-NP, Jawaharlal Nehru Road,
Ekkaduthangal, Chennai - 600 032.

குழந்தைகளின் குதூகலம்!

சின்னச் சின்ன ஆசை...

''எனக்குப் பிடிச்ச ஸ்வீட்னா பால்கோவா; சுற்றிப் பார்க்க விரும்பற இடம்னா சிம்லா; நல்லாப் படிச்சு Software Engineer- ஆகணும்னு விரும்பறேன்; நிறைய கதை புத்தகங்கள் படிப்பேன்; பாடங்கள்ல எனக்கு ரொம்பப் பிடிச்சது இங்கிலீஷ்தான்; என்னோட பெஸ்ட் ஃப்ரெண்ட் கீர்த்தனா; எங்க ஊரிலயே எனக்குப் பிடிச்ச இடம் ரமணாஸ்ரமத்துக்குப் பக்கத்துல இருக்கற பார்க்; ரொம்பவும் பிடித்த விளையாட்டு கோகோ; தலைவர்கள்னு சொன்னா ரவீந்திரநாத் தாகூர்தான் எனக்கு மிகவும் பிடித்தவர். ஒட்டு மொத்த உலகமும் தெரிஞ்சு வைச்சிருக்கற மாதிரி ஒரு தேசிய கீதத்தை எழுதினவர்; எனக்கு மிகவும் பிடித்த பெண் அன்னை தெரசா; எனக்குள்ள நிறைந்திருக்கிற ஆசைன்னா, டான்ஸரா ஆகணும். குறிப்பா வெஸ்டர்ன் டான்ஸர் ஆகப் புகழ் பெறணும்'' என்கிறாள் சிறுமி நிர்மலா தேவி.

திருவண்ணாமலை நகராட்சி மகளிர் மேல்நிலைப் பள்ளியில் எட்டாம் வகுப்பு பயிலும் நிர்மலா தேவியும், கன்னிகா பரமேஸ்வரி தொடக்கப் பள்ளியில் மூன்றாம் வகுப்பு பயிலும் கீர்த்தனா தேவியும் சகோதரிகள்.

கோகுலம் சிறுவர் சங்கத்தின் 999 மற்றும் 1000வது உறுப்பினர்களாக இடம் பெற்றுள்ளனர் இந்த இருவரும். இந்த மாத கோகுலத்தின் அட்டைப்படத்துக்காக திருவண்ணாமலை சென்றிருந்தபோது, நிர்மலா தேவி பட்டியலிட்ட சின்னச் சின்ன ஆசைகள்தான் நீங்கள் படித்தவை:

தங்கை கீர்த்தனாவுக்குப் படம் வரைவதில் ஆர்வம் அதிகமிருக்கிறது. ரன்னிங் மற்றும் கபடி விளையாட்டில் அதிக ஈடுபாடிருக்கிறது. தமிழ் டீச்சராக வேண்டும் என்றும் ஆசைப்படுகிறாள்.

''சிறுமிகள் இருவருமே படிப்பில் சுட்டிகள்'' என்று சந்தோஷப்படுகிறார் தந்தை

○ ராகவன் ○



வடிவழகன். ''வீட்டு வேலையில் எனக்கும் உதவுவார்கள்'' என்று பூரித்துச் சொல்கிறார் தாய்.

''குழந்தைகளுக்கு நீங்கள் எதுவும் பயிற்சி கொடுக்கிறீர்களா?''என்று வடிவழகனிடம் கேட்டால், ''பெரிசா நான் எதுவும் பண்ணிடலை. அவங்களா ஆர்வப்பட்டு படிக்கிறாங்க. படம் வரையறாங்க. டான்ஸ் ஆடுறாங்க. எல்லாம் அண்ணாமலையார் அருள்னு நான் நினைக்கிறேன்'' என்கிறார் புன்னகையோடு.

எல்லாக் குழந்தைகளுக்கும் உரிய இயல்பான ஆசைகள் மட்டுமல்ல; அதற்கு மாறுபட்டு, இலக்குகளோடும் ஆசைகளைக் கொண்டிருக்கிறார்கள் நிர்மலாவும் கீர்த்தனாவும் இது பாராட்டுக்குரிய விஷயம்! ஆல் தி பெஸ்ட்! ○

அட்டை, வண்ணப்படங்கள்:
ஸ்ரீஹரி



வயிற்றுவலியின் காரணம்?


வயிற்றுவலி என்பது நம் அனைவருக்கும் சாதாரணமாக வரக்கூடிய தொந்தரவு. வயிற்றில் உள்ள உறுப்புகளில் ஏதேனும் பிரச்னை தோன்றும்போது அதன் அறிகுறியாக வயிற்றில் வலிக்கும். உணவு அஜீரணத்தில் துவங்கி குடல் அடைப்பு வரை வயிற்று வலிக்குப் பல காரணங்கள் உள்ளன.

இரைப்பைப் புண்

இரைப்பையிலும் முன்சிறுகுடலிலும் புண் ஏற்படும்போது வயிற்றின் மேற்பகுதியில் நெஞ்சக்குழியில் வலி வரும். உணவு உண்டதும் வலி குறைந்தால் இரைப்பையில் புண் உள்ளது என்று பொருள். உணவு சாப்பிட்டு இரண்டு மணி நேரம் கழித்து வலி வந்தால், முன் சிறுகுடலில் புண் உள்ளது என்று பொருள். தவிர, வாந்தி, குமட்டல், நெஞ்செரிச்சல் போன்ற வேறு சில தொந்தரவுகளும் இருக்கும்.


குடல் புழுக்கள்:

குழந்தைகளுக்குக் குடல் புழுக்கள் காரணமாக வயிற்று வலி வருவது இயல்பு. ஐந்து மீட்டர் நீளமுள்ள குடலுக்குள் புழுக்கள் நெளிந்து பல இடங்களுக்கும் செல்லும்போது குடல் தசைகள் சுருங்கி வயிற்றில் வலி கொடுக்கும். பசி குறையும். அடிக்கடி குமட்டல் உண்டாகும். இரத்தசோகை ஏற்படும். குழந்தையின் வயதுக்கேற்ப உடல் எடை அதிகரிக்காது. அவ்வப்போது தோலில் வட்ட வட்டமாக



6 வழி!

- சுத்தமான உணவு மற்றும் குடிநீரைப் பயன்படுத்துங்கள். குறிப்பாக தெருக்களிலும் நடைபாதைகளிலும் விற்கப்படும் ஈக்கள் மொய்த்த



டாக்டர் கு.கணேசன்

ஒவ்வாமை தடிப்புகள் தோன்றும். தோலில் அரிப்பு ஏற்படும்.

குடல் அடைப்பு:

டைபாய்டு காய்ச்சல், குடல் காச நோய் போன்றவை குடலில் பெரிய அளவில் புண்களை ஏற்படுத்தும்போது அவை குடலை அடைத்துக்கொள்ளும். சமயங்களில் குடல் திருகி முறுக்கிக் கொள்ளும். குடல் பிதுக்கம் முற்றிய நிலையில் குடல் அடைப்பு ஏற்படுவதும் உண்டு. ஆரம்ப நிலையில் உள்ள குடல் அடைப்பைக் கவனிக்கத் தவறினால், குடல் அழுகி துளை விழுந்துவிடும். அது மிகவும் ஆபத்தான நிலைமை. நிமிர்ந்து நடக்க முடியாத அளவுக்குக் கடுமையான வயிற்று வலியும் வாந்தியும் இருந்தால், அது குடல் அடைப்பாகவோ குடலில் துளை விழுந்ததாகவோ இருக்க அதிக வாய்ப்புண்டு.

குடல்வால் அழற்சி:

குழந்தைகளுக்கு வருகின்ற வயிற்று வலிக்கு முக்கிய காரணங்களுள் ஒன்று

பண்டங்களைச் சாப்பிடாதீர்கள்.

- சுயசுத்தம் பேணுங்கள். நகங்களை அடிக்கடி சுத்தப்படுத்துங்கள். வெளியில் செல்லும்போது காலணி அணிந்து செல்லுங்கள்.
- நார்ச்சத்து நிறைந்த முழு தானியங்கள், காய்கறிகள், கீரைகள், பழங்களை அதிகமாக உண்ணுங்கள்.
- கொழுப்பு, உப்பு, காரம் நிறைந்த துரித உணவுகளைக் குறைத்துக் கொள்ளுங்கள்.
- சமச்சீரான உணவை, சரியான அளவில், சரியான நேரத்தில் சாப்பிடுங்கள்.
- சுற்றுப்புறத்தைத் தூய்மையாக வைத்துக் கொள்ளுங்கள்.



விடையைச் சொல்; பரிசை வெல்-20ல் கலந்துகொண்டு சரியான விடைகளை நூற்றுக்கணக்கானோர் அனுப்பி இருந்தனர். ஆகவே, பரிசுத் தொகையான ஆயிரம் ரூபாயை குலுக்கல் மூலம் பத்து பேருக்கு தலா ரூ.100/- வீதம் வழங்குகிறோம்.

சரியான விடைகள்

1. செயின்ட் ஹெலினா தீவு, 2. ஆந்தோசையனின், 3. ஆலமரம், 4. ஆஷ் மரம், 5. நியூஸிலாந்து

பரிசு பெறுவோர்:

1. எம். சுபா, சேலம்
2. ம. பிரவீன், தஞ்சாவூர்
3. எஸ். பால்சன், இராமநாதபுரம்
4. க. வினோத் கண்ணா, காரைக்குடி
5. பி. ஜெகன்குமார், பொள்ளாச்சி
6. சி. ரஞ்சிதா, மயிலாடுதுறை
7. எஸ். ராமலெட்சுமி, செங்கோட்டை
8. சு. அர்ஜுன், தேனி
9. டி. தாமினி, திருவண்ணாமலை
10. ஆர்.ஸ்ரீவித்யா, கோயமுத்தூர்

பரிசு பெற்றவர்களுக்கு வாழ்த்துகள்!
கலந்துகொண்ட அனைவருக்கும் நன்றி!

குடல்வால் அழற்சி. அசுத்த உணவு மற்றும் தூய்மையற்ற தண்ணீர் மூலம் உடலுக்குள் நுழையும் பாக்டீரியா கிருமிகள் குடல்வாலைத் தொற்றுகின்றன. இதன் விளைவால் அதில் அழற்சி உண்டாகிறது. இந்த நோயின் துவக்கத்தில் திடீரென்று தொப்புளைச் சுற்றி கடுமையாக வலி ஏற்படும்., சில மணி நேரங்களில் அந்த வலியானது வலது பக்க இடுப்புக்குழிக்கு மாறிவிடும். இதனைத் தொடர்ந்து குமட்டல், வாந்தி உண்டாகும். காய்ச்சல் வரும். உடனடியாக சிகிச்சை பெறத் தவறினால் குடல்வால் அழுகி வெடித்துவிடும். அப்போது நோயாளிக்கு ஆபத்து அதிகமாகும்.

பித்தப்பை பிரச்னைகள்

பித்த நீர் சுரக்கின்ற பித்தப்பையில் கற்கள் உருவாகும்போது வலது பக்க மேல்வயிற்றில் வலி வரும். உணவு உண்ட பின்பு சிறிது நேரம் செரிமானம் ஆகாமல் இருப்பது போன்ற உணர்வு, குமட்டல், வாந்தி உண்டாகும். ஏப்பம் போன்ற துணை அறிகுறிகளுடன் சிரமப்படுத்தும். பொதுவாக கொழுப்பு அதிகமுள்ள எண்ணெய்ப் பண்டங்களைச் சாப்பிட்டதும் இந்த வலி ஏற்படும். பித்தக் கற்கள் பித்தப்பையில் அழற்சியை ஏற்படுத்துமானால், குளிர் காய்ச்சல் வரும். பித்தப் பையை அவை அடைத்துக்கொள்ளும்போது மஞ்சள் காமாலை வரும்.

சிறுநீரகப் பிரச்னைகள்:

சிறுநீரகத்தில் வீக்கம், புண், கற்கள் முதலியன தோன்றினால் வயிற்றில் வலப்பக்கம் அல்லது இடப்பக்கம் விலாவோடு இணைந்து வயிற்றை வலிக்கும். வாந்தி வரும். சிறுநீர்க்கடுப்பு இருக்கும். ○

கிழவியின் அதிர்ஷ்டம்!



பெரவாடா சிறையில் காந்திஜி இருந்த சமயம். ஒருநாள் ஸர்தார் வல்லபாய் பட்டேலுடன் பேசிக் கொண்டிருந்தார். அப்போது அவர், ''தூக்கி எறியாமல் சேமித்து வைக்கப்படுகிற செத்த பாம்புகூட சில சமயம் காரியத்துக்கு உதவும் தெரியுமா?'' என்று கூறினார். 'எப்படிச் சொல்கிறீர்கள்?' என்று கேட்டார் பட்டேல். அதற்கு மகாத்மா ஒரு கதை சொன்னார்:

ஒரு கிழவியின் வீட்டில் பாம்பு வந்தது. அவள் போட்ட கூச்சலில் அக்கம் பக்கத்தார் வந்து கூடினார். எல்லோரும் சேர்ந்து பாம்பை அடித்துப் போட்டுவிட்டு அவரவர்கள் வீட்டுக்குத் திரும்பினர்.

கிழவி பாம்பை அப்பால் தொலைவில் எறிவதற்கு பதிலாகத் தன் குடிசையின் கூரை மேல் தூக்கிப் போட்டாள்.

சந்தர்ப்பவசம். ஆகாயத்தில் பறந்து கொண்டிருந்த ஒரு கழுகுக்கு அந்த செத்த பாம்பு கண்ணில் பட்டது. கழுகின் அலகில் ஒரு முத்துமாலை தொங்கிக் கொண்டிருந்தது. எங்கிருந்தோ கொத்தியெடுத்து வந்த மாலை. கழுகு மாலையைப் போட்டு விட்டுப் பாம்பைக் கொத்திக் கொண்டு போயிற்று. கூரை மேலே பளபளவென்று தெரிகிறதே என்று கிழவி ஒரு கம்பைக் கொண்டு கீழே இழுத்துப் பார்த்தால், ஒரு முத்து மாலை! கிழவி ஆனந்தக் கூத்தாடினாள்.

- சு. கண்ணகி,
மிட்டூர்





கொலுசுச் சத்தம்!


குழந்தைக் கடவுள்கள் - 6


கதை : ராகுல்

படம் : சொக்கலிங்கம்




நடந்தபடியே பாடுகிறார்....
பொன்னை நொந்து கொண்டால் அப்பொன் வருமோ...?
பின்னால் கொலுசுச் சத்தம்... திரும்பி...
யாருமில்லை...
ஜல் ஜல்!
வெற்றிலைச்சாற்றை உமிழ்கிறார்.
மீண்டும் நடக்க...
ஜல் ஜல்!
கொலுசு சப்தம்...
திரும்பி...
யாருமில்லையே... என்ன சப்தம் இது?
மேலும் நடக்கிறார்...
மறுநாள், உலகம்மன் சந்நிதியில்...
அடடா... இது என்ன விபரீதம்!
என்ன ஆச்சு?
பாருங்கள்... அம்மனின் ஆடையில் எச்சில்...


சன்னிதிக்குள் புகுந்து யார் இப்படிச் செய்தது?
மன்னரிடம் சொல்லுவோம்.
மன்னரின் அவையில்...
நிஜமாகவா சொல்கிறீர்கள்?
ஆமாம்... தாங்கள் வேண்டுமானாலும் பார்க்கலாம்.
அன்றிரவு...
பூட்டிய சன்னிதிக்குள் எப்படி புக முடியும்? எச்சில் பட்டிருப்பதும் உண்மைதான்.
கனவில் ஒரு சிறுமி...
நமசிவாயத்தின் பாடலைக் கேட்டபடியே பின்னால் சென்றேன். அவன் உமிழ்ந்த தாம்பூலச் சாறு...
கண் விழித்த மன்னன்...
கனவில் கண்டது நிஜமா?
காவலரை அழைத்து...
நமசிவாயப் புலவரை அழைத்து வாருங்கள்...
அவையில் புலவரிடம்...
நீர்தான் உலகம்மையின் மீது தாம்பூலத்தை உமிழ்ந்ததாக நினைக்கிறேன். அதனால்...
நானா? மன்னவா...?


அன்னையின் கரத்தில் கட்டப்படும் பூச்செண்டு உம் கரத்தில் வந்து விழுமாறு பாட வேண்டும்.
அன்னையைப் பாடுவேன். அது என் பணி.
உலகம்மன் சன்னிதி...
ம்... ஆகட்டும்...
என்றைக்கும் நீ துணை அம்மா! என் ஆவி...
பாட ஆரம்பிக்கிறார்
என்ன ஆகப்போகுதுன்னு தெரியலையே...
இருபது பாட்டு ஆச்சு...
வெற்றிலை பாக்கு போட்டதால வந்த ஆபத்தா?
ஏன் பயப்படற? அம்மன் கையில கட்டிருக்கிற நூல் அறுந்த மாதிரி தெரியுது பார்.
96 ஆம் பாடல் தொடர்கிறது...
விண்தலம் நின்ற சரத்கால சந்திர சுவேதமுக...
பாடல் முடியும்போது...
பூச்செண்டு விழ...
தாயே!
ஆச்சர்யம்!
அற்புதம்!
மன்னன் சிலிர்த்து...
தமிழ் பின்னே நடந்த தயாபரியே...
உலகம்மை புன்னகை தவழ நின்றாள்.

அறிவியல் கதைகள் - 4

ருனேவுக்கு மறுபடியும் உடம்பு சரியில்லை. அவர் சோர்வாகச் சுருண்டு படுத்திருந்தார். கை, காலெல்லாம் அடித்துப் போட்டதுபோல் வலி. தலையை நிமிர்த்திப் பார்க்கக்கூடத் தெம்பு இல்லை.

சின்ன வயதிலிருந்தே, ருனேவுக்கு அடிக்கடி உடல் நலம் கெட்டுப்போகும். ஏதாவது ஒரு பிரச்னை வந்து படுத்து விடுவார். ஆகவே, ருனேவின் ஆசிரியருக்கு அவர்மேல் கூடுதல் அக்கறை, பாசம்.

இதனால், ருனேவின் முகத்தில் லேசாகக் களைப்பு தெரிந்தால்கூடப் போதும், 'நல்லா ரெஸ்ட் எடுக்கணும் கண்ணு' என்று சொல்லி அவருடைய ஆசிரியர்கள் அவரைப் படுத்த படுக்கையாக்கிவிடுவார்கள்.


ஏனென்றால், அவர் நன்றாகப் படிக்கக்கூடிய புத்திசாலிப் பையன். வெறுமனே படிப்பதோடு நிறுத்திவிடாமல் நிறையக் கேள்விகள் கேட்டு, புதுசு புதுசாக யோசிக்கக்கூடிய கில்லாடி.

பள்ளிப் பருவத்தில் தொடங்கிய இந்தப் பிரச்னை, ருனே வளர்ந்து பெரியவரான பிறகும் எந்த மாற்றமும் இல்லாமல் தொடர்ந்து கொண்டிருந்தது. தினமும் காலை 11 மணி, 12 மணி வரை தளர்ந்து படுத்திருப்பது வழக்கமாகிவிட்டது.

அன்றைக்கும் அப்படிதான், ருனே மேல் கூரையைப் பார்த்துக் கொண்டு சும்மா படுத்திருந்தார். அவருக்குள் சமீபத்தில் படித்த, கேட்ட, சிந்தித்த விஷயங்கள் அலைமோதிக் கொண்டிருந்தன. அப்போது, அவர் வீட்டுக் கூரையில் ஒரு சின்னப்பூச்சி அங்கேயும் இங்கேயுமாகப் பறந்து ஓடியது.

உடனே, ருனே அந்தப் பூச்சியை வேடிக்கை பார்க்க ஆரம்பித்தார். இத்தனூண்டு கூரைக்குள் இந்தப் பூச்சி எப்படியெல்லாம் ஓடி ஆடி வேடிக்கை காட்டுகிறது என்று சுவாரஸ்யமாகப் பார்த்துக் கொண்டிருந்தார் அவர்.


பூச்சிக்கு



சாதாரணப் பூச்சி. அதைப் போய் யாராவது வேடிக்கை பார்ப்பார்களா?

ருனேவுக்கு வேறு வழியில்லை. சும்மா போரடித்துப் போய்ப் படுத்திருப்பதைவிட, இதையாவது பார்க்கலாமே என்று நினைத்தார்.

கூரையில் அந்தப் பூச்சி ஓர் இடத்தில் உட்காரமல் அங்கேயும் இங்கேயும் துள்ளி ஓடியது.



நன்றி!

முதலில் இடதுபக்கம் உட்கார்ந்திருந்த பூச்சி, பிறகு சட்டென்று வலது பக்கம் நோக்கிப் பறந்தது. அங்கே அரை விநாடி மட்டுமே உட்கார்ந்திருந்தது. பின்னர் அங்கிருந்து உடனடியாக இன்னொரு மூலைக்கு ஓடியது. கடைசியில் மீண்டும் முதல் இடத்துக்கே திரும்பி வந்து சேர்ந்தது.

அந்தப் பூச்சி எங்கெல்லாம் ஓடியதோ, அங்கெல்லாம் ருனேவின் கண்களும் பறந்தன. கூரையில் ஏதோ விநோத நாடகம் நடப்பதுபோல் இந்த விளையாட்டு அவருக்கு மிகவும் பிடித்திருந்தது.

அப்போதுதான், ருனேவுக்கு திடீரென்று ஒரு யோசனை. இந்தப் பூச்சி ஓர் இலக்கே இல்லாமல் அங்கேயும் இங்கேயும் இஷ்டப்படி ஓடுகிறதே, இதை நாம் எப்படிச் சரியாக ஞாபகம் வைத்துக்கொள்வது? இப்போது இன்னொருவரிடம் இதைப் பற்றிச் சொல்ல வேண்டும் என்றால், எப்படித் துல்லியமாகக் குறிப்பிட்டுச் சொல்வது?

கஷ்டம்தான். ஆனால் கொஞ்சம் முயற்சி செய்தால் நிச்சயமாக இதனைக் கண்டுபிடித்துவிடலாம் என்று அவர் யோசித்தார்.

ருனே வீட்டுக்கூரை, சதுர வடிவத்தில் இருந்தது. அந்தச் சதுரத்தில் இந்தப் பூச்சி சரியாக எங்கே உட்கார்ந்திருக்கிறது என்பதைக் குறிப்பிட்டுச் சொல்வது எப்படி என்கிற சூட்சுமம், அடுத்த சில நிமிடங்களுக்குள் அவருக்குப் புரிந்துவிட்டது.

இதற்கு வசதியாக, அந்தச் சதுரக் கூரையில் அருகருகே உள்ள இரண்டு விளிம்புகளை ருனே எடுத்துக்கொண்டார். இந்த இரண்டு விளிம்பிலிருந்தும் பூச்சி


○ என்.சொக்கன் ○

எத்தனை தூரத்தில் உள்ளது என்பதைக் கணக்கிடுவது அவருக்குச் சுலபமாக இருந்தது.

உதாரணமாக இந்தப் படத்தைப் பாருங்கள்.

இடது மூலையிலிருந்து பூச்சி 10 இஞ்ச் தொலைவில் இருக்கிறது. கீழ் மூலையிலிருந்து 3 இஞ்ச் தொலைவு. ஆக, அதன் இருப்பிடத்தை (10,3) என்று குறிக்கலாம்.

இப்போது, அங்கிருந்து பூச்சி பறந்து போய் இன்னோர் இடத்தில் உட்கார்ந்திருக்கிறது. அதை மீண்டும் படத்தில் குறிக்கலாம்.



இந்த முறை, பூச்சி இடது மூலையிலிருந்து 6 இஞ்ச் தொலைவில் இருக்கிறது. கீழ் மூலையிலிருந்து 5 இஞ்ச் தொலைவு. இப்போது அதன் இருப்பிடத்தை (6,5) என்று குறிக்கலாம்.

இப்படியே கொஞ்சம் கொஞ்சமாகக் கணக்குப் போட்டுப் பழகிய ருனே, அந்த சதுரக் கூரையில் பூச்சி எங்கெல்லாம் உட்கார்ந்திருக்கிறது என்பதையும், அதன் பாதையையும் துல்லியமாகக் குறிப்பிடும் அளவுக்கு தன்னுடைய புதிய யோசனையை மெருகேற்றிவிட்டார்.

இதுபற்றி மேலும் யோசித்தபோது ருனேவுக்கு அந்த அபூர்வமான உண்மை புலப்பட்டது. இந்தப் பூச்சியை மட்டுமல்ல; பூமியில் உள்ள எந்தப் பொருளையும் அதன் இருப்பிடத்தை, நகர்வதைக் குறிப்பதற்கு இந்த வழிமுறையைப் பயன்படுத்த முடியும்!

'ஆஹா' என்று குஷியாக எழுந்து உட்கார்ந்தார் ருனே. 'பூச்சி நண்பனே, நீ வாழ்க!' என்று சொல்லிவிட்டு தன்னுடைய புத்தம்புதுக் கண்டுபிடிப்பை எழுத்தில் பதிவு செய்ய ஆரம்பித்தார்.

X,Y என்கிற இரண்டு அச்சுகளை வைத்து, அவற்றின் நடுவே புள்ளிகள், கோடுகளைக் குறித்து உருவாக்கும் வரைபடங்களைத்தான், அந்தப் பூச்சியின் துணையோடு அன்றைக்குக் கண்டுபிடித்தார் ருனே டெஸ்கார்டெஸ். அவருடைய நினைவாக அவற்றை நாம் 'கார்டீசியன் வரைபடங்கள்' என்று பெருமையோடு அழைக்கிறோம்.

ஃப்ரெஞ்சுக்காரரான டெஸ்கார்டெஸின் 'பூச்சி'க் கண்டுபிடிப்பை, இன்றைக்குப் பல துறைகளில் உபயோகப்படுத்துகிறார்கள். நிறுவனங்களின் வரவு செலவுக் கணக்குகள், பங்குச் சந்தையின் ஏற்ற இறக்கங்கள், நோயாளிகளின் இதயத் துடிப்பு விவரங்கள்... என்று எத்தனையோ விஷயங்களைக் கச்சிதமான வரைபடங்களாக வடித்துக் காட்டி விளக்குவதற்கு இந்த எளிய முறை பயன்படுகிறது.

ருனேவுக்கு நன்றி, அவருக்கு வழி காட்டிய அந்தப் பூச்சிக்கும்தான்! ○



பெயர் : ....

முகவரி : ....

....

....

ஒரு வருட சந்தா ரூ. 96/-. இதை டிமாண்ட் டிராஃப்ட் அல்லது மணியார்டராக அனுப்புங்கள். இந்தத் தொகை 'Gokulam Tamil' என்ற பெயருக்கு இருக்க வேண்டும். உள்ளூர் காசோலைகள் மட்டுமே ஏற்கப்படும்.

அனுப்ப வேண்டிய முகவரி :

சர்க்குலேஷன் மானேஜர், கோகுலம் (தமிழ்), கல்கி பில்டிங்ஸ்,
47-NP, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல்,
சென்னை - 600 032

முன்னாவின்

- கார்த்திகா



சாயாவனம் மிகுந்த எழில் உடையது. பல வண்ண மலர்களைக் கொண்ட செடி கொடிகள் அங்கிருந்தன. உயரமான மரங்கள், கண்ணாடி போன்று தூய நீரோடும் ஆறு, பல இன வன விலங்குகள் நிறைந்த காடு அது.

சின்னு முயலும் அங்கே வாழ்ந்து வந்தது. புசுபுசுவென்று வெள்ளை நிறத்துடன் சிவந்த வாயும், பளபளக்கும் 'கரு கரு' கண்களுமாய் மிக்க அழகாயிருக்கும். அதன் குட்டி முயல் முன்னாவும் அதைப் போலவே அழகானது. ஆனால் நிறம் மட்டும் கறுப்பு.

அதன் மினுமினுக்கும் கறுப்பு நிறமே அதனுடைய அழகென்று மற்ற விலங்குகள் கூறி வந்தன. ஆனால் முன்னாவுக்கு மட்டும் தன் நிறத்தில் மேல் ஒரு வெறுப்பு.

தினமும் தாயிடம் தன் மனக்குறையை வெளியிட்டுச் சண்டையிடும்.

''நிறம் நம் மதிப்பை நிர்ணயிக்காது. நம் குணமும் அறிவும்தான் நம்மைப் பற்றிய மதிப்பை உண்டாக்கும்'' என்று சின்னு கூறும். முன்னா கோபத்துடன் வெளியே சென்றுவிடும். இது அடிக்கடி நடைபெறும் நிகழ்வு.

வழக்கமாக முன்னா காலையில் ஓரளவு மகிழ்ச்சியாக இருக்கும். ஆனால் காட்டில் அலைந்து திரியும் போது தன்னைச் சுற்றியுள்ளவற்றின் நிறங்களையே பார்த்துக் கொண்டு, தனக்குள்ளாகவே புலம்பிக் கொள்ளும்.

'இந்தக் காட்டுக்குள்ளே இயற்கை

எத்தனை விதமான நிறங்களை நிறைத்திருக்கிறது. இலைகள், மலர்கள், பட்டாம்பூச்சிகள்... என்று எவ்வளவு நிறக் கலவை. இவற்றில் ஏதாவது ஒரு நிறத்தில் நான் பிறந்திருக்கக் கூடாதா?' - இவ்வாறு எண்ணிக்கொண்டே சென்றது ஒருநாள்.



ஏக்கம்!

சிறுகதை

ஏதேனும் செய்து தன் நிறத்தை மாற்றிக் கொள்ள வேண்டும் என்று துடியாய்த் துடித்த முன்னா, வழியில் ஒரு புதிய நண்பனைச் சந்தித்தது.

தன் தந்திரத்தால் 'கொழு கொழு' முயல்களை ஏமாற்றி உண்ணும் வெள்ளையன் நரிதான் அந்த நண்பன். முன்னாவைப் பார்த்தும், அதை எப்படி ஏமாற்றி உண்ணலாம் என்று எண்ணியது வெள்ளையன்.

முன்னாவை மெதுவாக நெருங்கிப் புன்னகைத்து, 'நீ ஏன் மிகவும் சோகமாய் இருக்கிறாய்?'' என்றது.

பதில் கூறாமல், ' நீ யார்?' என்றது முன்னா.

''என் பெயர் வெள்ளையன்'' என்றதுமே முன்னாவுக்கு, வெள்ளையனை மிகவும் பிடித்துவிட்டது. ''என்னை உன் நண்பனாக நினைத்து, உன் குறை என்ன என்று சொல்'' என்றது வெள்ளையன்.

உடனே முன்னா தனது நிறம் பற்றிய குறையைக் கூறியது. 'சரியான சந்தர்ப்பம்'' என்று எண்ணிய வெள்ளையன், முன்னாவிடம், ''இவ்வளவுதானா? உன் கவலை தீர என்னிடம் வழி உள்ளது'' என்றது.

முன்னா, ''என்ன வழி, என்ன வழி?'' என்று ஆவலுடன் கேட்டது.

''நமது பூவாணி ஆற்றில் புது வெள்ளம் பாயும்போது, நமது குறையைச் சொல்லி மூன்று முறை முங்கினால் தீர்வு கிடைக்கும். நீ நாளை காலை அங்கு வா. நீ எண்ணிய நிறம் உனக்குக் கிடைக்கும்'' என்றது வெள்ளையன்.



முன்னாவைப் பார்த்ததும் அதை எப்படி ஏமாற்றி உண்ணலாம் என்று யோசித்தது வெள்ளையன்.

மகிழ்ச்சியில் துள்ளிக் குதித்துச் சென்றது முன்னா. 'நாளைய உணவுப் பிரச்னை தீர்ந்தது' என்று எண்ணிக் கொண்டே எதிர்த்திசையில் சென்றது வெள்ளையன்.

மறுநாள் சின்னுவுக்குத் தெரியாமல் கிளம்பிய முன்னா, அதிகாலையிலேயே ஆற்றங்கரையை அடைந்தது. வெள்ளையனுக்காகக் காத்திருந்த வேளையில், அக்கரையில் நின்றிருந்த அப்பு யானையைக் கண்டது. அதன் நிறத்தைக் கண்டு வெறுப்புற்றது. 'நல்ல வேளை இன்னும் கொஞ்ச நேரத்தில் என் நிறம் மாறிவிடும்' என்று நினைத்தது.

சரியாக வெள்ளையனும் வந்தது. முன்னாவைக் கண்டதும், ''உம்...உம்.... சீக்கிரம் நீரில் மூங்கு'' என்றது. முன்னா நீருக்குள் தலையை விட்டதும், அதைப் பிடித்துக் கொள்ள வேண்டும் என்று எண்ணியது வெள்ளையன்.

அந்நேரம் சின்னு வேறு சில விலங்குகளுடன் முன்னாவைத் தேடி வந்தது. அதைக் கண்ட வெள்ளையன் ஆபத்தை உணர்ந்து, 'தப்பித்தோம், பிழைத்தோம்' என்று தலைதெறிக்க ஓடியது. சத்தம் கேட்டுப் பதறிய முன்னா, தலைகுப்புற ஆற்றில் விழுந்தது.

நடந்தவற்றைக் கவனித்தவாறு அக்கரையில் நின்ற அப்பு, வெள்ளத்தில் இறங்கி, முன்னாவைக் காப்பாற்றிக் கரை சேர்த்தது.


வெள்ளையனின் வஞ்சகத்தை முன்னா அறிந்தது. நிறத்தைக் கொண்டு தான் வெறுத்த அப்பு தன்னைக் காத்ததை எண்ணியது; தன் தவறையும் உணர்ந்தது.

''அம்மா உன் அறிவுரையின் உண்மையை அறிந்துகொண்டேன். அப்பு அண்ணா... உனக்கு நன்றி... அம்மா இனி என் நிறத்தைக் குறையாகக் கருத மாட்டேன். கறுப்புதான் எனக்குப் பிடிச்ச கலரு'' என்று பாடியது.

அப்பு முன்னாவைத் தன் மேல் உட்கார வைத்து ஆடியது. மற்ற விலங்குகளும் சூழ்ந்து ஆடி மகிழ்ந்தன

விவேகானந்தரும் அவரது அன்னையும்

சுவாமி விவேகானந்தரின் சிறப்பைப் பற்றி எவ்வளவோ நூல்கள் வெளிவந்து விட்டன. ஆனால், அவருடைய தோற்றம், பண்புகள், நற்குணங்கள் இவற்றுக்கெல்லாம் காரணமாக விளங்கியவர் அவருடைய தாய் புவனேஸ்வரி தேவி ஒரு தாய் தன் மகனை எவ்வாறு உருவமைக்கிறாள் என்பதை புவனேஸ்வரி தேவியின் மூலமும், விவேகானந்தரின் வார்த்தைகள் மூலமும் அழகுற வடித்திருக்கிறார் ஸ்வாமி ததாகதானந்தர்.



வெளியீடு: ஸ்ரீராமகிருஷ்ணமடம், மைலாப்பூர், சென்னை - 4, விலை ரூ. 15/-

ஞானி ஜே. கிருஷ்ணமூர்த்தி அவர்களின் வாழ்வும் வாக்கும்



இந்தியாவின் தலைசிறந்த தத்துவஞானிகளுள் ஒருவர் ஜே. கிருஷ்ணமூர்த்தி. இவருடைய வாழ்க்கையைப் பற்றியும், தத்துவங்களைப் பற்றியும் சுருக்கமாகவும், தெளிவாகவும் எழுதியிருக்கிறார். திரைப்பட இயக்குனரும், தயாரிப்பாளருமான முக்தா சீனிவாசன். ஜே.கே. பற்றிய நல்ல அறிமுகம் இந்த நூல்.

வெளியீடு: திருக்குடந்தை பதிப்பகம், ப.எண். 74/1, பு.எண். 161/7, வி.எம். தெரு, ராயப்பேட்டை, சென்னை -14, விலை ரூ.65/-

வழிகாட்டிகள்!

சிறுவனின் தீர்ப்பு (சாமர்த்தியக் கதைகள்)

குழந்தைகளின் சிந்தனையில் நல்ல கருத்துக்களை ஊன்றுகிற தன்மை கதைகளுக்கே உண்டு. விட்டுக் கொடுப்பது, பணிவாக நடப்பது, புத்திசாலித்தனம்... இப்படிப்பட்ட விஷயங்களை கதை வடிவில் வழங்கியிருக்கிறார் பேராசிரியர் எ. ஜோதி. சிறியவர்கள் மட்டுமல்ல; பெரியவர்களும் படித்தறிய வேண்டிய நூல்!



வெளியீடு: நன்மொழிப் பதிப்பகம், 16, கங்கை வீதி, வசந்நிகர், புதுச்சேரி - 605 003. விலை ரூ. 85/-

கிரேக்க நாகரிகம்




உலகின் பழைமையான நாகரிகம் கிரேக்க நாகரிகம். கிரேக்க மக்களின் நம்பிக்கை, வாழ்க்கை முறை... குணங்கள், செயல்முறைகள், அங்கிருந்த பிளேட்டோ, அரிஸ்டாட்டில் போன்ற தத்துவஞானிகள்... அலெக்சாண்டர் போன்ற வீரர்கள்.... என்று, எளிய நடையில் நல்ல அறிமுகம் தந்துள்ளார் ஆர். முத்துக்குமார்.

வெளியீடு: ப்ராடிஜி, எண். 33/15, எல்டாம்ஸ் சாலை, ஆழ்வார்பேட்டை, சென்னை - 18, விலை ரூ. 25/-

காமராஜர் தமிழக முதல்வராக இருந்த சமயம்... ஒருமுறை அவர் திருச்சிக்கு வந்திருந்தார். அவரை வரவேற்க பலரும் மாலையுடன் வந்து காத்திருந்தனர். அந்தக் கூட்டத்தில் கையில் மாலையுடன் ஒரு பள்ளிக்கூட ஆசிரியரும் வந்திருந்தார். அவரைக் கண்ட காமராஜர் கோபமாக, ''படிக்காதவங்களுக்குப் பாடம் சொல்லிக் கொடுங்கன்னு சொன்னா, படிக்காதவனுக்கு மாலை போட வந்திருக்கீங்களே...'' என்று கேட்டார்.

'மாணவர்களின் அறிவுக் கண்ணைத் திறக்க வேண்டியதுதான் ஆசிரியர்களின் பணி' என்பதை இப்படி அறிவுறுத்தினார் காமராஜர்.

- கோடாவிளை
த.அருள்



மாலை

விஞ்ஞானி ஐன்ஸ்டீன் 'தியரி ஆப் ரிலேடிவிடி' என்ற ஒரு அறிவியல் உண்மையைக் கண்டுபிடித்தவர். இந்தக் கண்டுபிடிப்பு தொடர்பாக ஊர் ஊராகச் சென்று விளக்கிக் கொண்டிருந்தார் அவர். எல்லா ஊரிலும் ஒரே மாதிரி பேசிய அவரது பேச்சு அவருடைய கார் டிரைவருக்குப் பெரிதும் எரிச்சலை ஊட்டியிருந்தது. ''சார், உங்களோட இந்தப் பேச்சை நான்

திறமை



எத்தனையோ தடவை கேட்டாச்சு. என்னைத் தனியே விட்டால் கூட இதைப் பேசிடுவேன்'' என்று சவால் விட்டார் டிரைவர்.


தன்னைத் தெரியாத ஒரு ஊரில் தனது பேச்சுக்கு ஏற்பாடு செய்திருந்த கூட்டத்தில் டிரைவரை

'விஞ்ஞானி' என்று சொல்லிப் பேச ஏற்பாடு செய்துவிட்டார் ஐன்ஸ்டீன்.

டிரைவரும் ஐன்ஸ்டீன் என்று தன்னை அறிமுகம் செய்து கொண்டு பேசி அசத்திவிட்டார். நிஜ ஐன்ஸ்டீன் டிரைவராகக் காரில் அமர்ந்து கொள்ள, நகல்பேசி முடித்தவுடன் புதிதாய் ஒரு பிரச்னை எழுந்தது. கூட்டத்திலிருந்து எழுந்த ஒருவர் ஒரு கேள்வி கேட்கப் போக, பதிலறியாத டிரைவர் சமயோ ஜிதமாக இப்படி சமாளித்தார்.

''பூ... இதென்ன சாதாரணமான கேள்வி. இதற்கான பதிலை என் டிரைவரே சொல்வார்'' என்று சொல்லி டிரைவராக காரில் இருந்த ஐன்ஸ்டீனை அழைத்து பதில் சொல்லச் சொல்லிவிட்டு இறங்கினார் அவர். இது எப்படி?

– ஹேமமாலினி, சென்னை



சேவை

ஒரு நாள், தொழுநோயாளி ஒருவர், காந்தியடிகளின் வீட்டினருகே வந்து உணவு வேண்டினார். வேறு யாரானாலும், அவருக்கு உணவு வழங்காமல் விரட்டி விட்டிருப்பர், தமக்கு அந்நோய் வந்துவிடுமோ என அஞ்சி. ஆனால் காந்தியடிகளால் அவ்வாறு அன்பில்லாமல் செயல்பட முடியவில்லை; அவரைத் தன் வீட்டினுள் அழைத்துச் சென்று சிறிது நேரம் ஓய்வெடுக்க அனுமதித்ததோடு, உணவும் நீரும் வழங்கினார். அதுமட்டுமல்லாமல், அவரது புண்களுக்கு மருந்திட்டு துணியால் கட்டியதோடு அவரை மருத்துவமனைக்கும் அழைத்துச் சென்றார். மகாத்மாவால் மட்டுமே இது முடியும். இந்நிகழ்வு காந்தியடிகள் தென்னாப்பிரிக்காவில் இருந்த போது 1897ஆம் ஆண்டு நடந்தது.

– பா.விக்னேசுவரன், குட்டம்





வேட்டையாடும் கழுகுகள்!

எஸ். சுப்ரியா,
உ.எண்.79, சென்னை.

உலகம் முழுவதும் எட்டு வகையான கடல் கழுகுகள் உள்ளன. இவை ஒரே மாதிரியான வாழ்க்கை முறையைக் கொண்டுள்ளன. இவற்றில் மூன்று வகையான கழுகுகள் ஆர்க்டிக் பிரதேசத்தில் வாழ்கின்றன. சாம்பல் நிறக் கழுகு யுரேசியாவிலும், வழுக்கைத் தலை கழுகுகள் வட அமெரிக்காவிலும், ஸ்டெல்லர்ஸ் கழுகுகள் கிழக்கு சைபீரியா மற்றும் வடக்கு ஜப்பானிலும் காணப்படுகின்றன

ஸ்டெல்லர்ஸ் கழுகு மிகப் பயங்கரமான தோற்றம் உடையது. கழுத்து, நெற்றி, வால் இவை வெள்ளை நிறமாகவும், மீதி உடல் முழுவதும் கறுப்பு நிறமாகவும் இருக்கும். சில பெண் கழுகுகள் 18 கிலோ எடை வரை இருக்கும். யுரேசியன் கடல் கழுகுகள் 7.5 கிலோவுக்கு மேல் இருக்காது. வழுக்கைத் தலைக் கழுகுகள் இதை விடச் சிறியதாக இருக்கும். இவை எல்லாம் பெண் கழுகுகளின் எடையே. ஆண் கழுகுகளின் எடை இதை விட அதிகமாக இருக்கும். கடல் கழுகுகளின் அலகு பொருத்தமில்லாமல் மிகப் பெரியதாக இருக்கும். இதன் அலகு கோல்டன் ஈகிள் அலகைவிடப் பெரியதாக இருக்கும். அதே சமயத்தில் குறைந்த அளவு உணவே உண்ணும். கடல் பறவைகள், முயல்கள், பூனை, மீன் மற்றும் நீரில் மிதக்கும் இறந்த திமிங்கலத்தையும் உண்ணும். சிறிய ஆடுகளைக் கூட வேட்டையாடும் திறன் கொண்டவை, இந்தக் கடல் கழுகுகள்!

கோகுலம் டைஜஸ்ட்




இந்த மாத டைஜஸ்டில்...


- அ. அனீஸ் ஃபாத்திமா, போடி
- சு. அபிஷேக், சென்னை
- கு. ஷ்யாம், கும்பகோணம்
- ஜே. தனசேகர், நம்பியூர்
- பா. விக்னேஷ்வர், சேலம்
- மு. வைஷ்ணவி,கன்யாகுமரி
- வெ. ஆர்த்தி, செஞ்சி
- த. மணிமோகன், வெள்ளக்கோவில்
- மு. அருண்குமார், ஒசூர்
- எம். சுபா, சேலம்
- இ. தினேஷ், செஞ்சி
- க. ஐஸ்வரி, மலேசியா
- ச. கனகசுப்புலெட்சுமி, மூலக்கரைப்பட்டி
- செ.மு. இளம்பரிதி, நாமக்கல்

உள்ளே...

கர்வம் தந்த பரிசு!

கதை : அ.அனீஸ் ஃபாத்திமா. உ.எண் : 34. போடி ஓவியம் : தர்மா





உன்னை கண்டுபிடிச்சது 1885-லதான். ஆனா, 1839லயே நான் உலகத்தைப் பாத்துட்டேன். அதனால, மனிதனோட மனமும் குணமும் உன்னைவிட எனக்கு நல்லா தெரியும்....
அதெல்லாம் உனக்குத் தெரிஞ்சு என்ன பயன்? துடைக்காம தூக்கி மூலைல போட்டிருக்கறது ஏன்? அதை தெரிஞ்சுக்கிட்டியா?
வேண்டாம் இந்தக் கர்வம், கர்வத்துனால அழிவும், அவமானமும் வரும்.
சில நாட்களுக்குப் பிறகு... பைக்கின் உரிமையாளர்...
அடுத்த நாள்.... வாங்கியவர், அந்த பைக்கை எடுத்துச் செல்லும்போது, பைக் வருத்தமாய்...
யப்பா... விலைவாசி ஏறிட்டுப் போற வேகத்துக்கு, இந்த பைக்குக்கு பெட்ரோல் போட்டு கட்டுப்படியாகாது. பைக்கை விற்றுவிட வேண்டியதுதான்; பழையபடி சைக்கிள்தான் நமக்குத் தோது. உடற்பயிற்சியும் ஆச்சு; செலவும் கம்மி!
உழைப்பு, ஓய்வு ரெண்டுமே அளவா இங்க இருந்தது. ஆனா, என் கர்வம்தான் என்னை இங்கேர்ந்து வெளியேற்றி இருக்கு....
வருந்திய பைக்கை பரிவுடன் பார்த்தது சைக்கிள்.
Dharma

கண்ணீர் ஏன் வருகிறது?

கண்களிலிருந்து கண்ணீர் ஏன் வருகிறது? கண்ணீர் துளிகள் என்பவை யாவை? விஞ்ஞானிகள் இதற்கு விளக்கம் அளித்துள்ளார்கள். கண்ணீர் துளிகள் என்பவை உப்புத் தண்ணீரே. இதை சுவைத்துப் பார்த்தாலே, இதன் கரிக்கும் தன்மை தெரிய வரும். கண்களை உருள வைக்க உதவும் நீர்ப் பொருளை சுரக்கிறது ஒரு சுரப்பி. இயல்புக்கு மாறாக, நாம் உணர்ச்சி வசப்படும்போது அதிக அளவுக்கு நீரை அது வெளியிடுகிறது. திடீரென்று அளவுக்கு அதிகமாக நீர் ஏற்படுவதால் கண்களில் கண்ணீர் உருவாகுகிறது! லாக்ரிமல் சுரப்பி எனப்படும் இந்தச் சுரப்பியே, கண்ணீரை சுரக்கிறது. இது ஒரு சிறிய வாதுமைக் கொட்டை அளவுக்கு இருக்கிறது. கண்ணுக்கு உள்ளே கருவிழிக்கு மேலே இது அமைந்திருக்கிறது.

லாக்ரிமல் சுரப்பி!





சம்பளத்தை salary என்று சொல்வது ஏன்?

உப்பின் மகத்துவத்தை நம்மைவிட மெக்சிகோ நாட்டு மக்கள்தான் நன்கறிந்திருந்தார்கள். அவர்கள் உப்பையே ஒரு கடவுளாக்கி வணங்கினார்கள் என்றால் பார்த்துக் கொள்ளுங்களேன்! சம்பளம் என்ற கருத்தை குறிக்கும் ஆங்கிலச் சொல், salary. இது Salarium (உப்பு) என்ற வார்த்தையிலிருந்து வந்தது. ஆமாம்; பழங்காலத்தில் சம்பளம் இவ்வளவு உப்பு என்ற கணக்கில் இருந்ததாம்.

ரேடியோ பாடுவது எப்படி?

டிவி. வந்து ரேடியோவை ஓரங்கட்டி விட்டதென்றாலும் இன்றும் ரேடியோவுக்கு மவுசு இருக்கத்தான் செய்கிறது. வானொலியில் செய்திகள், இசை மற்றும் பல நிகழ்ச்சிகள் ஒலி பரப்பாகின்றன. இது எப்படி? ரேடியோ நிலையத்தில் குரல்கள் மற்றும் இசை நிகழ்ச்சிகள், கண்ணுக்குப் புலப்படாத மின் சிக்னல்களாக வானில் அனுப்பப்படுகின்றன. இவற்றை நமது ரேடியோவில் உள்ள மின் சர்க்கியூட்டுகள் ஈர்க்கின்றன. மீண்டும் அவற்றை குரல்களாகவும், இசையாகவும் மாற்றுகின்றன. இதனால், நிகழ்ச்சிகளை கேட்க முடிகிறது.



வாக்குவம் கிளீனர்

துடைப்பம் வைத்துப் பெருக்கியது அந்தக்காலம். வாக்குவம் கிளீனரை வைத்துப் பெருக்குவது இந்தக் காலம். வாக்குவம் கிளீனரின் உள்ளே ஒரு எலக்ரிக் மோட்டார் இருக்கிறது. இது செயல்படத் தொடங்கியதும் ஒரு விசிறியைத் தட்டி



விடுகிறது. இது காற்றை வாக்குவம் கிளீனரிலிருந்து வெளியே தள்ளுகிறது. இதனால் ஒரு குறிப்பிட்ட இடத்தில் உள்ள காற்று உள்ளே வேகமாக வருகிறது. அப்படி வரும்போது தூசி, துகள்களையெல்லாம் தாங்கிக் கொண்டு வருகிறது. கிளீனர் உள்ளே இருக்கும் பையில் இவை தங்குகின்றன.

– சு.அபிஷேக், ஆறாம் வகுப்பு,
உறுப்பினர் எண் : 518, சென்னை

விமானங்களில் பயணம் செய்யும் போது பேனா எடுத்துச் சென்றால் பேனாவினுள் உள்ள மை கசிவது ஏன்?

உயரமான இடங்களில் காற்றழுத்தம் குறைந்து காணப்படும். ஆனால் பேனாவினுள் காற்றழுத்தம் அதிகம். இதனால் பேனவிலுள்ள அதிக அழுத்தமான காற்று விரிவடைந்து மையை வெளியே தள்ளுகிறது. இதன் காரணமாக பேனாவிலுள்ள மை கசிந்து விடுகிறது.

– பா.விக்னேசுவரன், குட்டம்



ஷ்யாம், உறுப்பினர் எண் : 7, ஏழாம் வகுப்பு,

'குடமூக்கு' என்றும் 'கோயில் மலி குடந்தை' என்றும் குறிப்பிடப்படுவது எங்கள் ஊரான கும்பகோணம்.

● கும்பம் உடைந்து விழுந்ததால் குடந்தை என்றும் கும்பகோணம் என்றும் இந்த ஊர் பெயர் கொண்டது. உலகம் தோன்றியபோது, முதலில் தோன்றிய ஊர் என்றும் கூறுகின்றனர்.

● நகரின் மத்தியில் உள்ள ஆதி கும்பேஸ்வரர் கோயிலில், கும்பேஸ்வரர், மங்களாம்பிகை இருவரும் அழகுற காட்சி தருகின்றனர்.

● பன்னிரெண்டு வருடங்களுக்கு ஒரு முறை நடைபெறும் மகாமகம் எங்கள் ஊரின் தனிச் சிறப்பு. வருடம் தோறும் நடைபெறும் மாசிமகமும் விசேஷமானது.

● பள்ளி கொண்ட பெருமாளாக சாரங்கபாணி பெருமாள், பட்டாபிஷேக கோலத்தில் ராமஸ்வாமிப் பெருமாள், சக்கரத்தை கொண்டவராக சக்கரபாணி... என எங்கு பார்த்தாலும் கோயில்கள். கால வெள்ளத்தால் மறைந்துபோன 'நாலாயிர திவ்வியப் பிரபந்தத்'தில் எஞ்சியிருந்த பாடல்கள், இங்குள்ள ஆராவமுதப் பெருமாளைப் பாடியவைதான். அதைக் கேட்ட நாதமுனிகள் பிற்பாடு தேடி அலைந்து பிரபந்தத்தைத் தொகுத்தார்.

● பொதுவாக பிரம்மனுக்கு கோயில் இல்லை. ஆனால் பிரம்மனுக்கு இங்கு கோயில் உள்ளது.

● எங்கள் ஊரின் அருகில் உள்ள தாராசுரம் ஐராவதீஸ்வரர் கோயில் சிற்பக் கலைக்குப் பெயர் பெற்றது.


● அறுபடை வீடுகளில் ஒன்றான சுவாமி மலை எங்கள் ஊருக்கு மிக அருகில் உள்ளது.

● திருவிண்ணகர் எனப்படும் உப்பிலியப்பன் கோவில் திருத்தலம் ஆழ்வார்களின் பாடல் பெற்றது.

● கணித மேதை இராமானுஜம் வாழ்ந்தது எங்கள் மண்ணில்தான்.



கோயில்





ஸ்ரீ மாதா மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி, கும்பகோணம்.




- சாஸ்த்ரா பல்கலைக் கழகம் முன்னாள் குடியரசு தலைவரால் திறக்கப்பட்டு கல்விப் பணியை மிகவும் சிறப்புறச் செய்கிறது.
- ஆங்கிலேயர் காலத்தில் கட்டப்பட்ட அரசு ஆண்கள் தன்னாட்சி கல்லூரி சிறப்பாக நடைபெற்று வருகிறது.
- நாச்சியார் கோவிலில் இருந்துதான் பித்தளை குத்து விளக்குகள் செய்யப்பட்டு எல்லா ஊர்களுக்கும் ஏற்றுமதி ஆகின்றது.
- பட்டு நெசவுக்கு பெயர் போன திருபுவனம் எங்கள் ஊருக்கு மிக அருகிலுள்ளது. அங்குள்ள சிவன் கோவிலில் உள்ள சரபேஸ்வரர் சிறப்பு வாய்ந்த மூர்த்தி.
- சுவாமிமலையில் உள்ள சிற்பக் கூடங்களில் உலோக விக்ரகங்கள் வடிக்கப்படுகின்றன. இங்கு செய்யப்பட்ட சிற்பங்கள் பல வெளிநாடுகளில் மின்னிக் கொண்டிருக்கின்றன.
- இவை மட்டுமல்,; ஸ்ரீராகவேந்திர சுவாமிகளின் குருவான விஜயேந்திர தீர்த்தரின் பிருந்தாவனம் இங்குதான் அமைந்துள்ளது. தமிழ்த்தாத்தா உ.வே.சாமிநாதய்யர், வேளாண் விஞ்ஞானி எம்.எஸ்.சுவாமிநாதன், 'வாழும் கலை'யைப் போதிக்கும் ஸ்ரீஸ்ரீரவிசங்கர், திரைப்பட இயக்குனர் ஷங்கர் போன்றவர்களும் எங்கள் தஞ்சாவூர் மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள்தான்.



நகர்!



எங்கள் ஊர்



வண்ணம் தீட்டுங்கள்

இங்குள்ள
படத்துக்கு
வண்ணம் தீட்டி
மகிழுங்கள்



வேலை கிடைத்தது!


கதை : கே. தனசேகர், உறுப்பினர் எண் : 644, நம்பியூர். ஓவியம் : பிள்ளை




தனியே குகையில்...
இந்தத் திருடர்களிடம் இருந்து எப்படித் தப்புவது?
சிக்கினால் கொன்று விடுவார்கள்... ஆ...ஐடியா!
மறுநாள்...
அண்ணே.... எனக்கு ஒரு ஆசை!
என்னடா!
இல்ல... நீங்க கஷ்டப்பட்டு திருடிட்டு வரீங்க..
அதுக்கு என்ன இப்ப. நீ என்ன சொல்ல வர?
நானும் ஏதாவது ஹெல்ப் பண்ணனும்னு நினைக்கிறேன்.
உன்னால என்ன பண்ண முடியும்?
என்னையும் கூட்டிட்டு போங்க. நானும் கொஞ்சத்தை தூக்கிட்டு வரேன்.
சரி; நாளைக்கு போலாம்
இரவு வேளை... கிராமத்தில்
நாங்க பண்ணையார் வீட்டுக்கு போறோம். நீ, உன் கண்ணுல படறதை எடுத்துக்க.
சரிங்க
நால்வரும் பிரிந்து சென்றனர்...



ஒரு வீட்டினுள் வேலன்...
ஆ... கொம்பு!
இதை ஊதினால் அனைவரும் விழித்துக் கொள்வார்கள்.
இவர்கள் விழித்தால் திருடர்கள் பிடிபடுவார்கள். நாமும் தப்பிக்கலாம். பிரமாதம்...
ஒருவேளை திருடர்கள் தப்பிவிட்டால்... நம்மைக் கொன்று விடுவார்களே...
மரத்தின் பின்னே ஒளிந்து நின்றான்.
அந்த சமயத்தில்...
டமால்
ஐயோ என்ன சத்தம்?
பயத்தில் கொம்பை ஊத...
கண் விழித்த மக்கள்...
நீ யாரு? இங்க என்ன பண்ற?
திருடர்களை முதல்ல பிடிங்க!
ஓட முயன்ற திருடர்களை...
திருட்டுப் பயல்களா வசமா சிக்கினீங்க?
வேலனிடம், ஊர்த்தலைவர்
இப்ப சொல்லு... நீ யாரு?
வேலை தேடிப் போறேன்.
பண்ணையார்...
எங்கயும் வேணாம், என் பண்ணையிலே இரு.
நன்றி ஐயா!




கா. பாதமுத்து,
எட்டாம் வகுப்பு,
ஸ்ரீ கண்ணா மெட்ரிக்
மே.பள்ளி, சிந்தாமணி,
புளியங்குடி.

உங்கள் கைவண்ணம்!

பி. சந்திரகலா,
ஒன்பதாம் வகுப்பு 'அ' பிரிவு,
சாரதா மெட்ரிக் பள்ளி,
செஞ்சி 604 202



ஜி. அபிராமி,
ஏழாம் வகுப்பு 'அ' பிரிவு,
சாரதா மெட்ரிக் பள்ளி, செஞ்சி 604 202






சா. முஹையதின் ஷஜீஆ பானு,
ஆறாம் வகுப்பு 'ஆ' பிரிவு,
ஸ்ரீ கண்ணா மெட்ரிக் மேல் நிலைப் பள்ளி,
சிந்தாமணி, புளியங்குடி,
நெல்லை 627 855



கோ.ஜெயஸ்ரீ,
எட்டாம் வகுப்பு,
சச்சிதானந்தஜோதி மே.நி.பள்ளி,
கோவை



ஏ.ஆர்.அஜித்,
ஏழாம் வகுப்பு,
நாக் மெட்ரிக் பள்ளி,
சுமைதாங்கி,
வேலூர் மாவட்டம்



எஸ்.பி. ரவிக்குமார்,
ஒன்பதாம் வகுப்பு 'அ' பிரிவு,
காமராஜ் மேல்நிலைப் பள்ளி,
நம்பியூர் 638 458

I

1. சட்டை அணிய முடியாததேன் கோகுலத்தைப் படிப்பதேன்?
2. விலங்கின் பிள்ளையை அழைப்ப தெப்படி?
விநாயகரை வணங்குவதெப்படி?
3. ஒன்றைப் பலவாக்குவது எப்படி?
தலைவர்களை வரவேற்பது எப்படி?
4. பாலையும் நீரையும் பிரிப்பது என்ன?
பசிக்கு அன்னை இடுவது என்ன?
5. வலக்காலுக்கு எதிர்ச்சொல் என்ன?
வம்புக்காரன் அடிபட்ட தென்ன?
6. கூந்தல் மணப்பது எதனால்?
புள்ளிமான் வீழ்ந்தது எதனால்?
7. குளத்திலே மலரும் பூவென்ன?
நீர் அள்ள உதவும் பாத்திரம் என்ன?
8. பழங்களை நறுக்கிடத் தேவை யென்ன?
தூரத்தில் செல்பவரை அழைப்ப தெப்படி?
9. வா என்று அழைப்பதெப்படி?
வருமானத்தைச் சொல்வதெப்படி?


- மா.கண்ணன்,
திருநெல்வேலி

II(a)

கண்ணன் முதல் வகுப்பில் படிக்கிறான். அவன் தங்கை ராணி எல்.கே.ஜி. படிக்கிறாள். ஒரு நாள் கண்ணன் தன் சிலேட்டுப் பலகையில் ஒன்று முதல் நூறு வரை வீட்டுக் கணக்கு எழுதி வைத்திருக் கிறான். அவன் அப்பால் போன சமயம் பார்த்து, ராணி ஸ்லேட்டை எடுத்து 1 என்னும் எண்களையெல்லாம் அழித்து விடுகிறாள். பாவம் கண்ணன் மறுபடியும் எழுத வேண்டியிருக்கிறது. அவன் எத்தனை முறை 1 எழுத வேண் டும்?

II(b)

பேரரசர் ஒருவர் இருந்தார். யார் என்ன கேள்வி கேட்டாலும் கேட் பினும் அதற்குரிய பதிலை உடனே கூறிவிடுவார். அவரிடம் ஒரு முறை "1 முதல் 9 வரை அனைத்து எண்




உடைக்க



விடைகள்
65-ம் பக்கம்

களாலும் மீதமின்றி வகுபடும் என் எது?'' என்று வினவப் பட்டது. அதற்கு அவர், ''வாரத்தை மாதத்தால் பெருக்கி வரும் விடையை, வருடத்தின் மாதங் களால் பெருக்கினால் வரும் விடையே உங்கள் கேள்விக்கான விடை'' என்றாராம். அந்த எண் எது?





II(C) ஒரு குடும்பத்தில் ஒவ்வொரு பெண்ணுக்கும் சம அளவில் சகோதரிகளும், சகோதரர்களும் இருந்தனர். ஆனால், அக்குடும்பத்து பையன்

முடியாத பல்?

களுக்கு சகோதரர்களைவிட இரு மடங்கு சகோதரிகள் இருந்தனர். அப்படி என்றால் அந்தக் குடும்பத்தில் பெண்கள் எத்தனை? பையன்கள் எத்தனை?

- தஸ்மிலா, கீழக்கரை



III புதிர்கள்


1. மழையில் நனையாத காய் எது?
2. குடிக்க முடியாத பால் எது?
3. உடைக்க முடியாத பல் எது?
4. திருடனுக்குப் பிடித்த காய் எது?
5. தண்ணீர் இல்லாத ஆறு எது?
6. வள்ளல்குணம் கொண்ட மலை எது?
7. ஏறமுடியாத படி எது?
8. அதிகமாக துணி துவைக்கும் நகரம் எது?
9. பெண்களுக்குப் பிடித்த ஊர் எது?
10. பாம்பிற்கு வரும் நோய் எது?

- எம்.சுபா, சேலம்












உயிரியல் பூங்கா!

சென்னை,
உயிரியல் பூங்க
களில் தாவரங்க
அமைந்திருக்கி

- இந்திராக
- நேரு வி
- அஸ்ஸாம்
  செ
- சஞ்சய் க
- தேசிய வி
- கமலா நே
- ஸ்ரீ சாம்ரா
- நந்தன்க
- மகேந்திர
- கான்பூர்
- உயிரியல்

– எஸ்.தணிகை
சி.எஸ்.எம். ந







டலூரில் அமைந்திருக்கிறது அறிஞர் அண்ணா
இதைப் போன்றே இந்தியாவில் பல்வேறு இடங்
பறவைகள் மற்றும் விலங்குகளுக்கான பூங்காக்கள்
ன. அவற்றுள் சில...


தி விலங்கியல் பூங்கா, விசாகப்பட்டினம்.
கியல் பூங்கா, ஹைதராபாத்.
ாநில விலங்கியல் - தாவரவியல் பூங்கா,
ஹாத்தி.
தி உயிரியல் பூங்கா, பாட்னா.
ங்கியல் பூங்கா, டெல்லி.
உயிரியல் பூங்கா, அகமதாபாத்.
ஜந்திரா விலங்கியல் பூங்கா, மைசூர்.
உயிரியல் பூங்கா, ஒரிஸா.
சளத்ரி விலங்கியல் பூங்கா, பஞ்சாப்.
ங்கியல் பூங்கா, கன்வர், உத்திரப்பிரதேசம்.
ங்கா, கொல்கத்தா.

வல், உ. எண் : 762, பதினொன்றாம் வகுப்பு,
ாட்சி மேல்நிலைப் பள்ளி, பெரிய காஞ்சிபுரம்









குட்டி மீன் கோண்டு!
ஓவியம் : தர்மா
கதை : பி.எஸ். ஜேம்ஸ், தூத்துக்குடி.
'அம்மா பார்க்கவில்லை... நைஸாக தனியே ஒரு ரவுண்டு நீந்தி விளையாடலாம்...'
'சே... இந்த அம்மா எப்போதும் திட்டுகிறாள்... நான் கேட்க மாட்டேன்...'
கோண்டு, சுட்டித்தனம் மிகுந்த மீன்குட்டி. ஏதாவது சேட்டை செய்து கொண்டே இருக்கும்.
கரையோரம் சென்று...
அட... அழகான முயல்கள்... குயிலின் பாட்டு... ஜாலி!
'அம்மாவுக்கு மட்டும் தெரிந்தால்... காலி!'


அம்மாவுக்குத் தெரிந்துவிட்டது...
முட்டாள்.... என்ன சொன்னாலும் கேட்க மாட்டியா...?
மறுநாள்...பவளப் பாறைக்கு புறப் படும்போது...
அம்மா, அங்க முயல், குருவி, மான் எல்லாம் இருக்குமா? பார்க்க முடியுமா?
ஓ... இவனுக்கு கரையில் உள்ளதை பார்க்க ஆசையா?
கோண்டு! கரைக்குப் போனா, நமக்கு ஆபத்து. கொக்கு, பறவைகள் நம்மைச் சாப்பிட்டு விடும்.
ஆமா கோண்டு... நாம பாசியைத் திங்கறமாதிரி, அவங்க நம்மைச் சாப்பிடுவாங்க...
ஐயோ... என்னம்மா இப்படி சொல்றே...?
அரண்டு போனது கோண்டு. அதன்பிறகு அம்மாவை விட்டு விலகவேயில்லை!



தமிழ் அனுமதி!

எங்கள் கணித ஆசிரியர் பெயர் தமிழ். ஒரு தடவை தமிழ் பீரியடில் அவர் கணிதம் எடுத்துக் கொண்டிருந்தார். அப்போது அங்கு வந்த தமிழாசிரியர், ''தமிழ், தமிழ் பீரியடில் கணிதம் எடுக்கலாமா?'' என்று கேட்டார். உடனே, தமிழாசிரியரைச் சுட்டிக் காட்டிய கணித ஆசிரியர், 'அனைவரையும் அரவணைப்பது தமிழின் இயல்பு. அப்படியிருக்க, அந்தத் தமிழ், தமிழ் பீரியடில் கணிதம் நடத்த இந்தத் தமிழை அனுமதிக்கக் கூடாதா?'' என்றார். அதைக் கேட்ட தமிழாசிரியர் உட்பட மாண வர்கள் அனைவருமே சிரித்து விட்டோம்.

- வே.தனசேகர்,
உறுப்பினர் எண் : 31,
கும்மிடிப்பூண்டி

தரையிலா? மரத்திலா?

எங்கள் ஆசிரியர் அன்றைய செய்தித்தாளில் வெளிவந்த ஒலிம்பிக் பறவைக் கூடு ஸ்டேடியத்தின் வண் ணப் புகைப்படத்தை காட்டி, ''இந்த 29வது ஒலிம்பிக் போட்டிக்கு சீன அரசாங்கம் 1 லட்சத்து 80 ஆயிரம் கோடி ரூபாய் செலவு செய்யுது. இந் தப் பறவைக் கூடு ஸ்டேடியத்தை மட்டும் கட்ட 3,000 கோடி ரூபாய் செலவாகியிருக்கு'' என் றார்.

இதைக் கேட்ட ஒரு மாணவன் ''அப்படின்னா, இந்தப் பறவைக் கூடு ஸ்டேடியத்தை தரையிலே கட்டியிருக் காங்களா அல்லது மரத்து மேலே கட்டி யிருக்காங்களா?'' என்றானே பார்க்கலாம்.


அவன் கூறியதைக் கேட்ட அனை வரும் பலமாகச் சிரித்தோம். ஆசிரியரும் எங்களோடு சேர்ந்து கொண்டார்.

பிறகு, அது விளையாட்டு அரங் கம் என்று புரிய வைத்தார் ஆசிரியர். என்றாலும், எங்கள் சிரிப்பு அடங்க வெகு நேரமாயிற்று.



- அ.அனீஸ் ஃபாத்திமா,
உ.எண் : 34, போடி நாயக்கனூர்

ஸ்கூல் கலாட்டா




பிரம்பு காந்தம்!

வேதியியல் வகுப்பு நடந்து கொண்டிருந்தது. 'தன்னுடைய கதிர்வீச்சு எல்லைக்குள் வரும் இரும்பை ஈர்க்கும் தன்மை கொண்டது காந்தம்' என்று விளக்கிக் கொண்டிருந்தார் ஆசிரியை. அப்போது ஒரு குறும்புக்கார மாணவன் எழுந்து, ''மச்சர் இதை ஒரு உதாரணத்தின் மூலம் விளக்க முடியுமா?'' என்று கேட்டான். அவன் சேட்டையைப் புரிந்துகொண்ட ஆசிரியை 'சரி, விளக்குகிறேன்' என்றபடியே, பிரம்புடன் வந்தார்.

''இந்தப் பிரம்பு இரும்பு மாதிரி. நீ காந்தம் மாதிரி. உன்னிடம் வந்தவுடன் வேகமாய் உன்னைச் சாடுகிறது பிரம்பு என்றால், காந்தம் அப்படி ஈர்க்கிறது என்று பொருள்'' என்று சொன்னபடியே பிரம்பை ஓங்க, ''மச்சர்... எனக்குப் புரிஞ்சிடுச்சு'' என்று அலறினான் அந்த மாணவன்.

- மு.அர்விந்த் சண்முகம்,
விஸ்யு மேல்நிலைப் பள்ளி, கோவை



ஒன்றானவன்...!

ஒரு நாள்... தமிழாசிரியர் பாடம் நடத்திக்கொண்டிருந்தார். என் அருகே நண்பன் தஸ்லீம் அமர்ந்திருந்தான். 'பத்துப்பாட்டு என்பது ஐந்து ஆற்றுப் படை நூல்களைக் கொண்டது...'' என்று விவரிக்க ஆரம்பித்தார். அந்த நேரத்தில் தஸ்லீம் தூங்கிவிட்டான். அதை நானும் கவனிக்கவில்லை. சிறிது நேரம், சென்ற பின் அவனைக் கவனித்த ஆசிரியர், அவனை எழுப்பி 'பத்துப் பாட்டு என்றால் என்ன? சொல்' என்றான்.

திடீரென்று கண் விழித்த தஸ்லீம் என்ன சொல்வதென்று புரியாமல், 'ஒன்றானவன்; உருவில் இரண்டானவன்; உருவான செந்தமிழில் மூன்றானவன்' என்று பாட ஆரம்பித்தான்.


அதைக் கேட்டவுடன் மாணவர்கள் எல்லாரும் கலகலவென்று சிரிக்க ஆரம்பித்தனர். அந்தச் சிரிப்பில் ஆசிரியரும் கலந்து கொண்டார். 'ஒன்றானவன்' அவன் பட்டப் பெயர் ஆகிவிட்டது.

- ஸ்டீபன் ராஜ், எட்டாம் வகுப்பு,
சுவாமிநாதா உதவிபெறும்
நடுநிலைப் பள்ளி, சுவாமிமலை

வாலால் நீர்குடிக்கும் குருவி!

I 1. அங்கும் இங்கும் அலைவது இரண்டு;
பக்கம் பக்கமாய் பார்ப்பது இரண்டு;
இன்னொலி தன்னைக் கேட்பது இரண்டு;
எட்டி எடுத்துக்கொள்வது இரண்டு.
- அவை என்ன?

2. அகட விகட கர்ணம்;
சங்கிலி நாம கர்ணம்;
நாலு மூலை கர்ணம்;
நடுவிலே கும்ப கர்ணம்;
- அது என்ன?



3. ஆயிரம் கண்ணுடையாள்
இந்திரனும் அல்ல;
அநேக முடி சூழ்ந்திருக்கும்.
அரக்கனும் அல்ல;
உயிரை மாய்த்துவிடுவான்
எமனும் அல்ல;
தோள்மேல் ஏறிச்செல்வான்
பிள்ளையும் அல்ல.
- அவன் யார்?

- சு.அபிஷேக், சென்னை

II 1. மழைக்குப் பிறந்தவன் குடைக்கு எடுத்துக்காட்டு - அவன் யார்?

2. பச்சைக் குடுவையில் வெள்ளி மணிகள் - அது என்ன?

3. வீட்டையே தூக்குவான். மெல்ல நடப்பான் மேனி நோகாமல். யார் அவன்?


4. போவோர் வருவோருக்கு வழி காட்டுவான். ஆனால் பேச மாட்டான். - அவன் யார்?


- பா.விக்னேஷ்வர், பத்தாம் வகுப்பு, பாரதி வித்யாலயா பள்ளி, சேலம்

III 1. வண்ணாரப் பேட்டைக்கும், சின்னாளம் பேட்டைக்கும் நடக்க கெட்டிக்காரி; பாலில்லாமல் பிள்ளை வளர்ப்பாள் பலே கெட்டிக்காரி. அவள் யார்?

2. அடியில் பூக்கும்; நுனியில் பூக்காது - அது என்ன?

3. கிண்ணம் போல் பூ பூக்கும்; கிடாரம் போல் காய் காய்க்கும்? - அது என்ன?





4. ஏறினால் வழுக்கும், இலை சுருளும், காய் உவக்கும், கனி இனிக்கும் - அது என்ன?

- மு.வைஷ்ணவி,
உறுப்பினர் எண் : 215,
கன்னியாகுமரி

IV 1.உத்யோகம் இல்லாமல், ஊர் சுற்றி திரிகிறான் - அவன் யார்?

2. கையை வெட்டுவார், கழுத்தை வெட்டுவார். ஆனால் ஏனென்று கேட்க ஆளில்லை - அவர் யார்?

3. எட்டுவது போல் தெரியும். ஆனால் எட்டாது - அது என்ன?

4. போருக்கு போகாத வீரன், போர்க்களத்தையே விரட்டி விடுவான் - அவன் யார்?

5. எட்டாக் கொம்பிலே மிட்டாய் பொட்டலம் - அது என்ன?

- வெ.ஆர்த்தி,
எட்டாம் வகுப்பு,
சாரதா மெட்ரிகுலேஷன்
பள்ளி, செஞ்சி



விடுகதைகள்

V 1.பழுக்கும்; பழமல்ல; வெடிக்கும்; பட்டாசும் அல்ல. எனில் அது என்ன?

2. நடமாடுகின்ற வீடுகட்டி, திடமாக வாழ்பவன். அவன் யார்?

3. அதிசயக் குளத்திலே அற்புதக் குருவி; வாலினால் நீரை வற்றக் குடிக்குது. அது என்ன?

4. தாழ்ப்பாள் இல்லாத கதவு, தானாக மூடித் திறக்கும் கதவு. அது என்ன?

5. பூமியிலே வளராத மரம்; கிளை உண்டு. இலை இல்லை. அது என்ன?

-த.மணிமோகன், பத்தாம்
வகுப்பு, அறிஞர் அண்ணா
அரசு மேல்நிலைப் பள்ளி,
வெள்ளகோவில்



விடைகள்

I 1. கால், கண், காது, கை
2. தொட்டில்
3. மீன் வலை

II 1. காளான்,
2. வெண்டைக்காய், 3. நத்தை,
4. மைல் கல்

III 1. கோழி, 2.உப்பு,
3. பூசணிக்காய், 4. வாழை

IV 1. நாய், 2. தையல்காரர், 3. வானம்,
4. பாம்பு, 5. தேன்கூடு

V 1. இலவங்காய் - (பஞ்சு),
2. ஆமை, 3. விளக்குத்திரி,
4. இமை, 5. மான்கொம்பு

இரு நண்பர்கள்

கதை : மு. அருண்குமார் உறுப்பினர் எண் : 670, ஓசூர். ஓவியம் : பிள்ளை





சமையலறையில் பிரவீன்...
ஏன் ரவி ஒரு மாதிரி பேசினான்...?
ரவியின் மனசுக்குள் குறு குறுப்பு...
சே... நான்தான் தப்பா சொல்லிட்டேன். பிரவீன் என் மேல அன்பாத்தான் இருக்கான்...
அப்போது வந்த ரவியின் அப்பா...
அட.... நீ வந்திருக்கியா? காஃபி வேற கலந்திருக்கே... குட்பாய்!
அங்கிள் நீங்க அன்ப இல்லேன்னு ரவி நினைக்கிறானே
அப்படியா சொன்னான்?
ஆமா அங்கிள். அப்படி நினைச்சு ரொம்ப வருத்தப்படறான்.
என்னோட வேலை டென்ஷன்ல சிலநாளா அவனைக் கவனிக்கலை... பாவம் என் ரவி...
நான் நினைச்ச மாதிரிதான் நடந்திருக்கு...
கேட்டபடியே வந்த ரவி...
ஸாரிப்பா... நான்தான் உங்க அன்பை புரிஞ்சுக்கலை...
அப்பா சிரித்தபடியே...
பரவாயில்லை ரவி. இனிமே சரியா புரிஞ்சுக்கோ. அப்பாதான் உன் பெஸ்ட் ஃப்ரண்ட்!
ஸாரிப்பா
ரவி இன்னொரு விஷயம். இந்த தடவையும் நூறு மார்க்தான்.
ஹை... ஜாலி! இது டபுள் சந்தோஷம்!


'எண்'ணங்கள்!

ஒன்றும் ஒன்றும் இரண்டு
ஓடி விளையாடு திரண்டு
ஒன்றும் இரண்டும் மூன்று
உழைப்பே உயர்வின் சான்று
ஒன்றும் மூன்றும் நான்கு
என்றும் அறிவுக்கு ஏங்கு
ஒன்றும் நான்கும் ஐந்து
உண்பாய் பிறர்க்கும்
தந்து.
ஒன்றும் ஐந்தும் ஆறு
உலகைச் சுற்றிப் பாரு
ஒன்றும் ஆறும் ஏழு
பலரும் புகழ வாழு
ஒன்றும் ஏழும் எட்டு
சிறந்து விளங்கு சிட்டு
ஒன்றும் எட்டும் ஒன்பது
நன்றாய் மெல்லு தின்பது
ஒன்றும் ஒன்பதும் பத்து
நல்லுணவே நமக்குச் சத்து!

- எம்.சுபா,
உறுப்பினர் எண் : 880,
பனிரெண்டாம் வகுப்பு,
பாலபாரதி மெட்ரிக்
மேல்நிலைப் பள்ளி, சேலம்



கேள்வி



ஓ... மகாத்மாவே
நாங்களெல்லாம்
வறுமைக் கோட்டில்
வாடிக் கொண்டிருக்கும்போது
நீங்கள் எப்படி
கரன்சி நோட்டில்
புன்னகை புரிகின்றீர்கள்?!

- இ.தினேஷ்,
ஆறாம் வகுப்பு, சாரதா
மெட்ரிக் பள்ளி,
செஞ்சி

கரடி மாமா

கரடி மாமா வருகிறார்
கண்ணா இங்கே ஓடி வா
குட்டிக்கரணம் போடுகிறார்
குதித்துக் குதித்து நடக்கின்றார்
கோலைத் தோளில் வைக்கிறார்
குனிந்து நிமிர்ந்து பார்க்கிறார்
கரடி வித்தை பார்க்கவே,
காசு பத்தைக் கொடுக்கலாம்.

- க.ஐஸ்வரி, தாமான் மெலாவாத்தி
தமிழ் பள்ளி, சிலாங்கூர், மலேசியா




ஒற்றுமை வளர...

எங்கள் ஊரில் திருவிழா
பத்து நாட்கள் நடக்குமே
மக்கள் கூட்டம் திரளுமே
மகிழ்ச்சி வெள்ளம் பொங்குமே

அணிந்து மகிழ புத்தாடை
சுவைத்து ருசிக்க மிட்டாய்கள்
ஆட்டம் பாட்டம் கொண்டாட்டம்
அத்தனையும் இனிமையே

வீடு நிறைய விருந்தினர்
தட்டு நிறைய பலகாரம்
கூடை நிறைய பழங்களும்
குறைவே இன்றி நிறைந்திடும்.


ஊரில் வாணவேடிக்கை
தெருக்கள் தோறும் மேளச்சத்தம்
திருவிழாவும் தேவைதான்
ஒற்றுமையும் வளரவே!



கு.ஷ்யாம், உறுப்பினர் எண் : 7,
ஏழாம் வகுப்பு, ஸ்ரீமாதா
மெட்ரிகுலேஷன் மேல்நிலைப்
பள்ளி, கும்பகோணம்

வித்தியாசங்களைக் கண்டுபிடி!

இரண்டு படங்களுக்கும் இடையே ஐந்து வித்தியாசங்கள் உள்ளன. அவற்றைக் கண்டுபிடியுங்கள்.



சிங்கம் சிவா

கதை : ச. கனகசப்புலெட்சுமி,
பத்தாம் வகுப்பு, மூலக்கரைப்பட்டி.
ஓவியம் : பிள்ளை



கடலில் எதிரிகளே இல்லாமல் வாழும் மீன் எது?

வெள்ளை சுறாவுக்கு எதிரிகளே இல்லை. 'கொலைகாரத் திமிங்கலம்'கூட இதைக் கண்டால் ஒதுங்கிப் போகும்.

'டீ'யில் எத்தனை வகைகள் உள்ளன?

'டீ'யில் 3 வகைகள் மட்டுமே உள்ளன. அவை கறுப்பு டீ, பச்சை டீ, உலாஸ் டீ என்பன. கொதிக்க வைத்து வறுத்துத் தயார் செய்யும் 'டீ'க்கு, கறுப்பு டீ என்று பெயர். பச்சை டீயை கொதிக்க வைப்பது கிடையாது. வறுப்பதும் கிடையாது. வெள்ளாவியில் வைத்து, அப்படியே பொட்டலம் கட்டி அனுப்பப்படுகிறது. உலாஸ் டீ என்பது பழுப்பு பச்சை நிறத்தில் இருக்கும். ஓரளவு கொதிக்க வைத்து வறுத்தெடுக்கப்படுவது இது. 'டீ'யில் 2000க்கும் மேற்பட்ட கலவை வகைகள் உள்ளன.

முன்னோக்கியும் பின்னோக்கியும் கீழ்நோக்கியும் நீந்தும் மீன் எது?

மீன் இனத்தில் பிகாஸ்கோ மீன் என்று ஓர் இனம் உள்ளது. இதன் துடுப்புகள் ரிப்பன் போன்று அமைந்திருக்கும். இந்த துடுப்புகளின் உதவியால் இந்த மீனால் முன்னோக்கியும், பின்னோக்கியும், கீழ் நோக்கியும் நீந்த முடியும்.

பிகாஸ்கோ

நம்மால் எத்தனை வகை வாசனைகளை உணர முடியும்?

நம்மால் ஏறக்குறைய 10,000 விதமான வாசனைகளை உணர முடியும்.

நமது விரல் நகங்களில் எந்த விரல் நகம் வேகமாக வளரக்கூடியது? எந்த விரல் நகம் மெதுவாக வளரக் கூடியது?





வீட்டு 'ஈ' எத்தனை வகையான நோய்களைப் பரப்புகிறது?

வீட்டு 'ஈ' முப்பது வகையான நோய் களைப் பரப்புகிறது.

சிரிப்பதற்கு எத்தனை தசைகள் உதவுகின்றன? கோபப்படுவதற்கு எத் தனை தசைகள் உதவுகின்றன?

சிரிப்பதற்கு 17 தசைகளும், கோபப் படுவதற்கு 43 தசைகளும் உதவுகின் றன.

- எ.மு. இளம்பரிதி, உ.எண்: 637
எட்டாம் வகுப்பு,
பாரதி மேல்நிலைப் பள்ளி,
நாமக்கல்

மீன்!

விரல் நகங்களில் நடு விரல் நகம் வேகமாக வளரக் கூடியது. கட்டை விரல் நகம் மெதுவாக வளரக் கூடியது.

நான்கு முழங்கால் மூட்டுகள் கொண்ட பிராணி எது?

யானை ஒன்றுக்குத்தான் நான்கு முழங்கால் மூட்டுகள் உள் ளன.

பிருத்வி

இந்தியாவில் போர் விமானங் களைத் தயாரிக்கும் நிறுவனம், ஹிந்துஸ் தான் ஏரோநாட்டிகல் லிமிடெட் (பெங்களூரு)

ஆப்பிள் பழத்தில் அடங்கியுள்ள அமிலத்தின் பெயர், 'மாலிக்' அமிலம்.

இந்தியா தானே உருவாக்கிய, கண்டம் விட்டுக் கண்டம் பாயும் முதல் ஏவுகணை, பிருத்வி.

ஏவுகணை வீச்சுத் திறன் பெற்ற முதல் இந்திய ஹைப்பர் விமானம், அவதார்.

கால்களில் விரல்கள் இல்லாமல், வெறும் நகங்களை பெற் றுள்ள ஒரே விலங்கு யானை.



- அ. அனீஸ் ஃபாத்திமா,
உ.எண். 34,
சிசம் மெட்ரிக் மேல்
நிலைப் பள்ளி,
போடிநாயக்கனூர்



விடைகள் பக்கம்



சரியான்னு பாருங்க!

I 1. பிடிப்பதால், 2. குட்டி, 3. துண்டு போட்டு, 4. அன்னம், 5. இடக்கால், 6. சரத்தால், 7. குவளை, 8. கத்தி, 9. வருவாய்

II(a) : 21 முறை

II(b) : 7 X 30 = 210 X 12 = 2520

II(c) : 4 பெண்கள், 3 பையன்கள்

III : 1.'குடை' மிளகாய், 2.த'பால்', 3.சோம்'பல்', 4.'கத்திரி'க்காய், 5.எண் '6', 6. கொடைக்கானல், 7.தள்ளு'படி', 8.'வாஷிங்'டன், 9.'பட்டு'க்கோட்டை, 10.'புற்று' நோய்

ஐந்து வித்தியாசங்கள்

1. சட்டையில் பட்டன்,
2. பையனின் வாய்,
3. தண்ணீர்,
4. பந்தில் கோடு,
5. திரைச்சீலை

அன்பு நண்பர்களே...

'கோகுலம் டைஜஸ்ட்' பகுதிக்கு கதை, கவிதை, அறிவியல் துணுக்குகள், புதிர்கள், சுற்றுலா அனுபவம், பள்ளி மற்றும் வீட்டில் நடந்த பல்சுவை அனுபவங்களை எழுதியனுப்புங்கள். படைப்புகளுடன் உங்கள் பெயர், வகுப்பு, பள்ளி, வீட்டு முகவரியைத் தெளிவாகக் குறிப்பிட வேண்டும். அனுப்ப வேண்டிய முகவரி:

ஆசிரியர் - கோகுலம்

(டைஜஸ்ட் பகுதி)

47 - NP, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை - 600 032

படைப்புகளை அனுப்புங்கள்; பங்கேற்று அசத்துங்கள்!

951. அ.வேல்முருகன், ஒன்பதாம் வகுப்பு, காமராஜ் மேல்நிலைப் பள்ளி, நம்பியூர்
952. க.கார்த்திக், எட்டாம் வகுப்பு, காமராஜ் மேல்நிலைப் பள்ளி, நம்பியூர்
953. எஸ்.வேதராமன், ஒன்பதாம் வகுப்பு, கலைமகள் மெட்ரிக் மே.நி. பள்ளி, செம்பை
954. இரா.ஜனனி, பதினோராம் வகுப்பு, ஆக்ஸிலியம் பெண்கள் மேல்நிலைப் பள்ளி, தஞ்சாவூர்
955. வி.ஆர்.ஸ்ரீஅரவிந்தன், இரண்டாம் வகுப்பு, சி.எஸ்.மெட்ரிக் பள்ளி, தஞ்சாவூர்
956. சௌ.ஸ்ரீகாயத்ரி, ஏழாம் வகுப்பு, ஜெய்வாய் மாநகராட்சி பெண்கள் பள்ளி, திருப்பூர்
957. பா.பெனில் ஷெர்பின், ஏழாம் வகுப்பு, தௌபெ மெட்ரிகுலேஷன் பள்ளி, மத்திகோடு
958. இரா.காயத்ரி, ஏழாம் வகுப்பு, இராமகிருஷ்ண வித்யாலயா மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி, விழுப்புரம்
959. ஜெ.முத்துராஜ், பதினோராம் வகுப்பு, ஆர்.வி. அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி, ஓசூர்



960. கே.மணிகண்ட பிரபாகரன், எட்டாம் வகுப்பு, இரயில்வே இருபாலர் மேல்நிலைப் பள்ளி, மதுரை
961. ஜி.பிரபாகரன், பதினோராம் வகுப்பு, சி.எஸ்.எம்.நகராட்சி மேல்நிலைப் பள்ளி, காஞ்சிபுரம்
962. க.செந்தமிழ் ராஜா, ஆறாம் வகுப்பு, ஏ.கே.டி.மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி, கள்ளக்குறிச்சி
963. நா.முத்துக்குமார், நான்காம் வகுப்பு, என்.ஆர்.எம்.ஜி.&ஆர். மெட்ரிக் பள்ளி, கரூர்
964. பி.சதீஷ்குமார், பதினோராம் வகுப்பு, அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி, அணைக்கட்டு
965. பி.சரத்குமார், பத்தாம் வகுப்பு, அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி, அணைக்கட்டு
966. ஹபீப் முகம்மது, ஐந்தாம் வகுப்பு, எல்.கே.மெட்ரிகுலேஷன் பள்ளி, காயல்பட்டிணம்.
967. எம்.ஆர்.கௌசல்யா, நான்காம் வகுப்பு, எம்பசோ மேல்நிலைப் பள்ளி, வாணியம்பாடி
968. இ.பவித்ரா, ஏழாம் வகுப்பு, மாரியம்மாள் பெண்கள் மேல்நிலைப் பள்ளி, பொள்ளாச்சி
969. பெ.இன்னிசை வேந்தன், மூன்றாம் வகுப்பு, அரசு நடுநிலைப் பள்ளி, வாஸ்பேட்டை

970. எஸ்.சுதாகர், எட்டாம் வகுப்பு, காமராஜ் மேல்நிலைப் பள்ளி, நம்பியூர்
971. ப.கோகுல கிருஷ்ணன், எட்டாம் வகுப்பு, காமராஜ் மேல்நிலைப் பள்ளி, நம்பியூர்
972. அ.முகமது காமில், பதினொராம் வகுப்பு, ஆர்.வி. அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி, ஓசூர்
973. ஜெ.சாரதா, ஒன்பதாம் வகுப்பு, அ.ம.உ.நி. பள்ளி, கோட்டூர்
974. எஸ்.டி.லோக கணபதி, எட்டாம் வகுப்பு, தொன்போஸ்கோ உயர்நிலைப் பள்ளி, சகாயதோட்டம்
975. எம்.ஆர்.கௌதம், எட்டாம் வகுப்பு, எம்பசோ மேல்நிலைப் பள்ளி, வளையாம்பட்டு
976. சே.அன்பரசன், ஆறாம் வகுப்பு, புனித ஜேம்ஸ் மேல்நிலைப் பள்ளி, பாலக்குறிச்சி



977. இர.பூ.ஸ்வாதி, ஏழாம் வகுப்பு, வேலம்மாள் மெட்ரிக் பள்ளி, சென்னை
978. ரா.சங்கரநாராயணன், மூன்றாம் வகுப்பு, ஜி.கே.ஷெட்டி விவேகானந்த வித்யாலயா, சென்னை-53
979. க.கார்குழலி, ஒன்பதாம் வகுப்பு, ஏ.கே.டி. மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி, கள்ளக்குறிச்சி
980. அஸ்மிதா. கி, ஏழாம் வகுப்பு, எம்.வி.எம். வித்யாமந்திர் மேல்நிலைப் பள்ளி, திருநெல்வேலி
981. கா.மணிமேகலை, ஐந்தாம் வகுப்பு, ஆரோக்கியமாதா மெட்ரிக் பள்ளி, பொள்ளாச்சி
982. வெ.ராஜகோபால், ஏழாம் வகுப்பு, காமராஜ் மேல்நிலைப் பள்ளி, நம்பியூர்
983. க.மணிமண்டன், ஏழாம் வகுப்பு, காமராஜ் மே.நி. பள்ளி, நம்பியூர்
984. ஜெராட் ஜேடன் லியோனஸ், முதல் வகுப்பு, விசா மெட்ரிக் உயர்நிலைப் பள்ளி, சென்னை
985. ஜெ.அ.ஜெனா, மூன்றாம் வகுப்பு, தூய இருதய மழலையர் தொடக்கப் பள்ளி, தஞ்சாவூர்
986. ஏ.தினேஷ்குமார், ஒன்பதாம் வகுப்பு, அரசு மேல்நிலைப் பள்ளி, மானாம்பதி
987. மீ.கனிமொழி, எட்டாம் வகுப்பு, காமராஜ் மேல்நிலைப் பள்ளி, நம்பியூர்
988. வி.தேன்கனி, ஒன்பதாம் வகுப்பு, புனித வளனார் க்ளுனி மேல்நிலைப் பள்ளி, நெய்வேலி
989. வி.தென்னிசை, நான்காம் வகுப்பு, புனித வளனார் க்ளுனி மே.நி. பள்ளி, நெய்வேலி
990. நா.கார்த்திகா, நான்காம் வகுப்பு, கோகுலம் நர்சரி & பிரைமரி பள்ளி, பொத்தனூர்
991. மா.பத்மாவதி, பத்தாம் வகுப்பு, அரசினர் மகளிர் உ.நி. பள்ளி, கும்மிடிப்பூண்டி
992. கே.சௌம்யா, ஆறாம் வகுப்பு, பாரதிதாசன் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி, காஞ்சிபுரம்
993. ஆர்.தரணிதரன், ஏழாம் வகுப்பு, காமராஜ் மேல்நிலைப் பள்ளி, நம்பியூர்

கோகுலம் சிறுவர் சங்கம் - கூப்பன்

என் பெயர் : ....

வயது : ....

பெற்றோர் பெயர் : ....

வகுப்பு, பள்ளி : ....

: ....

வீட்டு முகவரி : ....

....

....

புகைப்படம்

நான் கோகுலம் சிறுவர் சங்கத்தின் உறுப்பினராகச் சேர விரும்புகிறேன். உங்கள் நிபந்தனைகளை ஏற்றுக்கொள்கிறேன்.

(கையொப்பம்)

இதுவரை கோகுலம் சிறுவர் சங்கத்துக்கு கூப்பன் அனுப்பாதவர்கள் உடனே அனுப்புங்கள். உங்கள் நண்பர்களுக்கும் விஷயத்தைச் சொல்லி, அவர்களையும் உறுப்பினராக்குங்கள்!

994. ஜே.சுவாதி சித்ரா, எட்டாம் வகுப்பு, அமிர்தா வித்யாலயம் பள்ளி, மதுரை

995. பெ.சுஜித், ஏழாம் வகுப்பு, காமராஜ் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி, நம்பியூர்

996. தி.கார்த்திகா, ஆறாம் வகுப்பு, அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளி, நத்தம்

997. கோ.சதீஷ்பிரபு, ஏழாம் வகுப்பு, காமராஜ் மேல்நிலைப் பள்ளி, நம்பியூர்

998. ஏ.சுலைஹத் ஃபைஷஹா, இஸ்லாமியா மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி, கீழக்கரை

999. ஜீ.வி. நிர்மலா தேவி, எட்டாம் வகுப்பு, நகராட்சி மகளிர் மேல்நிலைப் பள்ளி, திருவண்ணாமலை

1000. வி.கீர்த்தனா தேவி, மூன்றாம் வகுப்பு, கன்னிகா பரமேஸ்வரி தொடக்கப் பள்ளி, திருவண்ணாமலை





குட்டியூண்டு குருவி

குருவிகளில் 'பூங்கொத்திக் குருவி' என்று ஓர் இனம் உள்ளது. இது பார்ப்பதற்குத் தேன்சிட்டு போலிருக்கும். குருவிகளிலேயே மிகச் சிறியது இதுதான். இக்குருவி மிகச் சுறுசுறுப்பாக இயங்கும். குட்டையான அலகுடைய இதன் உணவு பூந்தேன். தொங்குக் கூடு அமைத்து அதில் முட்டையிடும்.


- பா.விக்னேசுவரன், குட்டம்



பட்ரிகாலஜி

தவளையின் தலை முக்கோண வடிவத்தில் இருக்கும். அவற்றுக்கு காதுகள் கிடையாது. மாறாக, 'டிம்பனம்' என்ற பகுதி உண்டு. இவை தவளைக்கு செவியாக பயன்படுகின்றன. இதன் முன்கால்களில் நான்கு விரல்கள் உண்டு. முன்கால்கள் உடல் எடையைத் தாங்க உதவுகின்றன. பின் கால்கள் நீந்த உதவுகின்றன. இவை குளங்கள், வயல்வெளிகளில் காணப்படும். தோலின் மேல்புறம் பச்சை நிறத்திலும் கீழ்புறம் மஞ்சள் நிறத்திலும் இருக்கும். இவை நுரையீரல் வாயிலாக சுவாசிக்கின்றன. தவளையைப் பற்றி படிப்பதற்கான படிப்பின் பெயர் பட்ரிகாலஜி (Batrecology).

- ரா. சௌம்யா மணி, உ.எண்: 507, ஒன்பதாம் வகுப்பு, ராஜ் மெட்ரிகுலேஷன் பள்ளி, மயிலாடுதுறை



விஷப்பை

மலைப்பாம்புகளில் பிரம்மாண்ட மலைப்பாம்பு 30 அடி நீளம் கொண்ட அனகொண்டா. இது பெரு, பிரேசில் கயானா ஆகிய நாடுகளில் உள்ள காடு

நேச மீன்!

டால்பின்கள் மிகவும் புத்திசாலி மீன்கள். உலகம் முழுவதும் உள்ள கோஸ்டல் பகுதிகளில் இம்மீன்கள் காணப்படுகின்றன. இவை, மிகவும் நுண்ணிய கேட்கும் திறன் கொண் டவை. தங்களுடைய இரை ஏற்படுத்தும் ஒரு சப்தத்தை கொண்டு அவற்றை கண்டுபிடித்துவிடும். அலைகள் அசை வதை கொண்டும்கூட இரையை குறி வைத்துவிடும். இவை மிக நன்றாக நீந் தக் கூடியவை. ஒரு மணி நேரத்தில் 56 கி.மீ. தூரம் நீந்தும் இயல்புடைய டால்பின், நேசமாக பழகும் இயல்புடை யது. - டி.விவேக், குட்டம்



தகவல்




13 மாதங்கள்!

உலகிலேயே மிக வேகமாக ஓடும் பூச்சி கரப்பான் பூச்சி. இவை இறக்கைகள் பெற்றிருந்தாலும் பறப்பது ஒரு சில சமயங்களில் மட்டுமே. வெகு தொலைவில் உள்ள பொருட்களைக் கூட வாசனையால் நுகர்ந்து அறிந்து கொள்கின்றன.

கரப்பான் பூச்சி கால்பட்ட இடமெல்லாம் துர்நாற்றம் அடிக்கும். ஒரு கரப்பான் பூச்சியின் தலையை அதன் உடலில் இருந்து மிகச் சரியாக அறுத்து அகற்றிவிட்டால் ஏழு மணி நேரம் தலையில்லாமலே அது உயிர் வாழும். கரப்பான் பூச்சியின் ஆயுட்காலம் 13 மாதங்கள் ஆகும்!

– எஸ்.சுப்ரியா, உறுப்பினர் எண் : 79, சென்னை

இல்லாத பாம்பு!



களில் வாழ்கிறது. இந்த பாம்பு பச்சை மற்றும் பழுப்பு நிறத்தில் காணப்படும். எப்பொழுதும் மறைந்தே வாழும். இதற்கு விஷப்பை இல்லை எனினும், பறவை குரங்கு என, எது அகப்பட்டுக் கொண்டாலும் அப்படியே நசுக்கி விழுங்கி விடும்; செரிமானம் ஆவதற்காக வாரக்கணக்கில் படுத்துக் கிடக்கும். - எம்.விவேக், திருநெல்வேலி

ராஜனுக்குக் கல்யாணம்!

வி. நித்யா, ஒன்பதாம் வகுப்பு,
காமராஜ் மேல்நிலைப் பள்ளி, நம்பியூர்.


அந்த எலியோட பேரு ராஜன். அழகான அந்த ராஜன், சின்ன இடுக்குலயும் புகுந்து புறப்படும். படு கில்லாடி.

அந்த ராஜனுக்குக் கல்யாணம் பண்ண அவங்க அம்மாவும் அப்பாவும் ரொம்பவும் ஆசைப்பட்டாங்க.

"பொண்ணு எப்படிடா இருக்கணும்"னு ராஜன்கிட்டே கேட்டாங்க.

ராஜன் என்ன சொல்லிச்சு தெரியுமா?

"எனக்கு வரப்போற மனைவி ரொம்ப அழகா இருக்கணும். நல்ல பலசாலியா இருக்கணும். எலியாத்தான் இருக்கணும்னு அவசியமில்ல' என்று பெற்றோரிடம் சொன்னது ராஜன்.



அப்பாவும் அம்மாவும் யோசிச்சாங்க.

"அழகாவும், பலசாலியாவும் இருக்கிறது கடல்பறவைதான். இதையே பொண்ணு கேக்கலாம்"னு முடிவு செய்தாங்க.

ரெண்டு பேரும் கடல்பறவையைப் போய்ப் பார்த்தாங்க. அதைப் பார்த்து, "எங்க ராஜனைக் கல்யாணம் பண்ணிக்கிறியா"ன்னு கேட்டாங்க.

உடனே, கடல்பறவை, "நீங்க கேட்டதுல தப்பில்ல. ஆனா, என்னைவிட அழகிலேயும், பலத்திலேயும் பெரியது திமிங்கிலம். அதைப் போயி கேளுங்க"ன்னு சொல்லுச்சு.

அது சொன்ன மாதிரியே ரெண்டு பேரும் திமிங்கலத்துக்கிட்டே போயி கேட்டாங்க.

"நான் அழகா, பலசாலியா இருக்கலாம். ஆனா, என்னையே பிடிக்கிறவன், மீனவன்

தான். அதனால அவனோட பொண்ணைப் போயி கேளுங்க''ன்னு சொன்னது திமிங் கலம்.

உடனே, அப்பா அம்மா ரெண்டு பேரும் மீனவன் வீட்டுக்குப் போயி, 'ராஜனுக்குப் பொண்ணு தர விருப்ப முண்டா'ன்னு கேட்டாங்க.

''என்னதான் நான் பலசாலியா இருந் தாலும், திமிங்கலத்தையே பிடிக்கிறது



உறுதியான என்னோட வலைதான். அதுக் கிட்ட போயி கேளுங்க''ன்னாரு மீனவர்.


''சரி''ன்னு வலையிடம் போய் கேட்டாங்க.

''நான் உறுதியான ஆளுதான். ஆனா என்னையே கடிக்கிற உறுதியான பற்கள் எலிக்குத்தான் இருக்கு. அதனால எலியையே போயி பொண்ணு கேளுங்க''ன்னு கூறியது வலை.


''அட எல்லாத்தையும்விட எலிதான் பலசாலி போலயிருக்கே!'' என்று எண்ணி

குட்டிக் கதை

சந்தோசமடைந்த அம்மாவும், அப்பாவும், ராஜனுக்கு நல்ல எலிப் பொண்ணைப் பார்த்து தடபுடலா கல்யாணம் பண்ணி வைத்தார்கள். ○



''அவரால பல பேர் உயர்ந்திருக்காங்க.''
''அப்படியா! அவர் என்ன பண்றார்?''
''ஹைஹீல்ஸ் செருப்பு தயாரிக்கிறார்.''
- அ.பேச்சியப்பன், ராஜபாளையம்





''நேற்று பஸ்ஸில் போகும்போது திடீர்னு குடை சாய்ஞ்சுடுச்சு!''
''அச்சச்சோ, அப்புறம் என்னாச்சு?''
''பிறகென்ன, குடையை எடுத்து நிமிர்த்தி வச்சேன்!''
- ஜி.சுந்தரராஜன், திருத்தங்கல்

சிரிப்பலை

''பையனுக்கு கிள்ளி வளவன்னு பேர் வச்சது தப்பாப் போச்சு!''
''என்னாச்சு?''
''வகுப்புல எல்லாரையும் கிள்ளி வச்சிடறானாம்!''
- ச.ஆ.கேசவன்,
இனாம் மணியாச்சி



மதர் டங்?




''அப்பா அப்ளிகேஷன் ஃபார்ம்ல மதர்டங்க் என்னென்னு கேட்டிருக்கு என்ன போடுறது?''
'''ரொம்ப நீளம்'னு போடு!''
- ஏ.அஹமது இர்ஷாத்,
அதிராம்பட்டினம்



ஆஹா, அதிசயங்கள்!

கௌதம்ராம்

உலக அதிசயங்கள் என்றவுடன், நமக்கு தாஜ்மஹால் நினைவுக்கு வரும். முதன் முதலாக இவற்றைப் பட்டியலிட்டவர்கள் கிரேக்கர்கள். ஏழு என்பது மிகவும் ராசியான எண்ணாகக் கருதப்பட்டதால், ஏழு மட்டுமே பட்டியலில் இடம் பெற்றன. அவற்றில் முதல் இடம் பிடித்தவை எகிப்தில் உள்ள பிரமிடுகள்.



* விளையாட்டு அரங்கம், இத்தாலி




* மெக்சிகோ

எகிப்திய பிரமிடுகளை அடுத்துப் பட்டியலில் இடம் பெற்றவை: (1) பாபிலோனியாவின் தொங்கும் தோட்டம், (2) அலெக்சாண்டிரியாவின் கலங்கரை விளக்கு, (3) ரோட்ஸ் தீவின் காவல் தெய்வமான ஹீலியஸ் சிலை, (4) பண்டைய துருக்கியில், ஆர்டிமெஸ் தேவதைக்குக் கட்டப்பட்ட கோயில், (5) மத்திய தரைக்கடலை ஒட்டிய 'ஹாலிகார்னசஸ்' என்ற சிறு நாட்டை ஆண்ட மன்னரின் மறைவால் மனமொடிந்த அரசி, தன் கணவருக்குக் கட்டிய கல்லறை, (6) ஒலிம்பியாவில் உள்ள சூயஸ் கடவுள் சிலை.

இவற்றில், எகிப்திய பிரமிடுகள் மட்டும் சுற்றுலாப் பயணிகளைப் பெருமளவில் ஈர்க்கின்றன.

அடுத்ததாக 5ஆம் நூற்றாண்டு முதல் 15 ஆம் நூற்றாண்டு வரையிலான இடைக் காலத்தில் இருந்த உலக அதிசயங்களைப் பார்க்கலாம்.




* ரியோ-டி- ஜெனிரோ

இங்கிலாந்தில் சாலிஸ்பெரி என்ற இடத்தில் உள்ள 'ஸ்டோன்ஹெஞ்' ஒரு பூமி வழிபாட்டுத் தலமாக இருந்ததாகத் தெரிகிறது. பிரம்மாண்டமான கல் தூண்களையும், கற்பலகைகளையும் கொண்டு கட்டப்பட்ட இந்த இடம், வானியல் கணக்கீடுகள் செய்யவும் பயன்பட்டது. 6400 கி.மீ நீளமுள்ள சீனப் பெருஞ்சுவர் இன்னொரு உலக அதிசயம். எகிப்து நாட்டில், அலெக்சாண்டிரியாவில் 1900 வருடங்களுக்கு முன் கட்டப்பட்ட கல்லறைகள் 'கேட்ட



* மாச்சுபிச்சு



கோம்ப்ஸ் ஆஃப் கொம் எல் ஷுகபா' கலை நயம் மற்றும் சிக்கலான வழிப்பாதை அமைப்புகளுக்காக உலக அதிசயமாகப் பார்க்கப்பட்டன.

பைசா நகர தேவாலயத்தின் மணியைக் கட்டுவதற்காக 1173ல் கட்டப்பட்ட கோபுரம், கட்ட ஆரம்பித்த சில ஆண்டுகளிலேயே சாய ஆரம்பித்ததால், அதற்கு உலக அதிசயம் என்ற அந்தஸ்து கிடைத்துள்ளது.


நவீன காலத்தின் உலக அதிசயங்கள் பட்டியலில், இந்தியாவில் உள்ள தாஜ் மஹாலும் இடம் பெற்றது. ஆக்ராவில் யமுனை நதிக்கரையில் அமைந்துள்ள தாஜ்மஹாலை 20 ஆயிரம் தொழிலாளர்கள், 22 ஆண்டுகளில் கட்டி முடித்தனர்.

அதேபோல அமெரிக்காவில் நியூயார்க் நகரில் 1930ஆம் ஆண்டு கட்டப்பட்ட எம்பயர் ஸ்டேட் பில்டிங்கும் உலக அதிசயங்களில் ஒன்று. இது நூற்றுக்கும் மேலான மாடிகள் கொண்ட உலகின் மிக உயரமான கட்டடங்களுள் ஒன்றாகும்.


காலம் என்பது தொடர்ந்த மாற்றத்துக்குள்ளாவதுபோல, உலக அதிசயங்கள் பட்டியலையும் மாற்றம் விட்டு வைக்கவில்லை. ஸ்விட்சர்லாந்தைச் சேர்ந்த 'புதிய ஏழு உலக அதிசயங்கள் பவுண்டேஷன்' என்ற அமைப்பு, உலகளாவிய இன்டர்நெட் வாக்கெடுப்பு ஒன்றை நடத்தியது. உலகெங்குமிருந்து 200க்கும் அதிகமான இடங்கள் அதற்குப் பரிந்துரை செய்யப்பட்டன. அவற்றில் மதுரை மீனாட்சி கோயிலும் ஒன்று என்பது குறிப்பிடத்தக்கது. பத்து கோடி மக்கள் பங்கேற்ற அந்த இணையதள வாக்கெடுப்பின் இறுதியில் தேர்ந்தெடுக்கப்பட்ட ஏழு அதிசயங்கள் பின்

வருமாறு:-

சிசென் இட்சா (மெக்சிகோ), மீட்கும் கடவுள் ஏசு சிலை (பிரேசில்), விளையாட்டரங்கம் (இத்தாலி), சீனப் பெருஞ்சுவர், மாச்சு பிச்சு (பெரு), பெட்ரா (ஜோர்டான்), தாஜ்மஹால்.



* பெட்ரா



* எகிப்து

சிசென் இட்சா, மெக்சிகோவில் உள்ள ஒரு தொல்பொருள் ஆய்வு இடமாகும். இங்கே ஓர் வானியல் ஆய்வுக்கூடம் இருந்தது.

பிரேசில் நாட்டில், ரியோ டிஜெனிரோ நகரத்தில் கார்கொவோடோ மலைப் பகுதியில் 700 மீ உயரத்தில் மிகப் பெரிய ஏசு சிலை 1931ல் நிறுவப்பட்டது. 38 மீ உயரமுள்ள இந்தச் சிலையை அமைக்க ஐந்து ஆண்டுகள் ஆகின.

சூரியன், சந்திரன், பூமி, மலைகள், நதிகள், மரங்கள் மற்றும் காற்றினைப் போற்றும் வண்ணம் உருவாக்கப்பட்ட வழிபாட்டுத் தலம் தான், மாச்சுபிச்சு. இது பெரு நாட்டில் ஆண்டீஸ் மலைப் பகுதியில் அமைந்துள்ளது.

கிரேக்க மொழியில் பேட்ரா என்றால் பாறை. ஜோர்டான் நாட்டில் மெசபடோமிய, கிரேக்க, எகிப்திய, ரோமானிய கட்டடக் கலைகளின் கலவையில் பாறைகளைக் குடைந்து உருவாக்கப்பட்ட நகரம்தான் பேட்ரா.

புதிய ஏழு உலக அதிசயங்களில் தாஜ்மஹால், சீனப் பெருஞ்சுவர் போன்றவை முந்தைய பட்டியலில் இடம் பெற்றிருந்தவை. இந்த ஏழுடன், காலங்களைக் கடந்து, இன்னமும் கம்பீரமாக நிமிர்ந்து நிற்கும் எகிப்தின் பிரமிடுகளுக்கு பிரத்யேக இடமும் அளிக்கப்பட்டுள்ளது.



என்னதான் கிளி 'கீ...கீ'ன்னு கத்தினாலும் அதால ஒரு 'பூட்டை'க்கூட திறக்க முடியாது.

- சி. விஜயாம்பாள், சந்தைப்பேட்டை



பால்கோவாவை பாலில் இருந்து தயாரிக்கலாம். ரசகுல்லாவை ரசத்தில் இருந்து தயாரிக்க முடியாது.

- அனீஸ் ஃபாத்திமா, உ.எண்.34

'ரச'குல்லா!




'குளவி கொட்டினா வலிக்கும், தேள் கொட்டினா வலிக்கும். ஆனா முடி கொட்டினால் வலிக்காது!

கார் ஓட்ட டிரைவர் வேணும்! ஆனா 'ஓட்ட காரு'க்கு மெக்கானிக்குதான் வேணும்!

'என்னதான் அகிம்சாவாதியாக இருந்தாலும் சப்பாத்தியை 'சுட்டு'தான் சாப்பிடணும்!

- ப. கோபிபச்சமுத்து, கிருஷ்ணகிரி







கடி'O'கடி

'என்னதான் நெருப்புக்கோழியா இருந்தாலும் அது அவிச்ச முட்டை போடாது.

- அனீஸ் ஃபாத்திமா,
உ.எண்.34





''சிவகாசிக்கும் நெய்வேலிக்கும் சின்ன வித்தியாசம்தான்; சிவகாசியில காசு கரியாகும்; நெய்வேலியில் கரி காசாகும்.''

- ஜி. சாயிலட்சுமி, திருநெல்வேலி



மோதிர விரல்ல மோதிரம் போடலாம்! ஆனா கட்டை விரல்ல கட்டையை போட முடியாது!'

- சி. விஜயாம்பாள்,
சந்தைபேட்டை




என்னதான் பெரிய வீரனா இருந்தாலும் வெயில் அடிச்சா... திருப்பி அடிக்க முடியாது.

- ஆர். பிரியதர்ஷிணி,
பூனாம்பாளையம்

புளி போட்டு செய்தால் புளி சோறு; தயிர் போட்டு செய்தால் தயிர் சோறு; எதைப் போட்டு செய்தால் தண்டச்சோறு!

- துரை. இராமகிருஷ்ணன்,ஏரகுடி



கண்ணாடியைத் திடப்பொருள் என்றுதானே சொல்லுவோம். விஞ்ஞான ரீதியாக இது தவறு. கண்ணாடி ஒரு விறைத்த திரவம் (Rigid liquid) ஆகும்.

ஒரு சிப்பியில் முத்து விளைவதற்கு 15-20 வருடங்கள் வரை ஆகின்றன.

பிராணிகளில் தண்ணீரே குடிக்காதது ஆஸ்திரேலியாவில் இருக்கும் கோலா எனப்படும் கரடி இனம் தான். வெறும் யூகலிப்டஸ் மரத்தின் பட்டையைத் தவிர வேறு எதையும் உண்ணாது.

- பி. சர்வேஸ்வரன்,
உறுப்பினர் எண்: 456, மதுரை







வெல்லஸ் ஹேர்!

வெல்லஸ் ஹேர் (Vellus Hair) என்பது பிறந்த குழந்தையின் தலை முடிக்குச் சொல்லப்படும் ஆங்கிலப் பெயராகும்.

'**டை**யாபடீஸ்' என்று நாம் சாதாரணமாக அழைக்கும் நோயின் மருத்துவப் பெயர் 'டையாபடீஸ் மெல்லிடஸ்' என்பதாகும்.

துப்பாக்கி குண்டுகளால் துளைக்க முடியாத உலோகம் மாலிப்டினம்.

ஒளி 9,46,030 கோடி கிலோ மீட்டர் தூரத்தைக் கடப்பதற்கு ஓர் ஆண்டு காலம் பிடிக்கும். இதுவே 'ஓர் ஒளி ஆண்டு' என்று சொல்லப்படுகின்றது.

நிலவில் நடந்த மனிதனின் காலடிச் சுவடுகள் இன்னும் 5 லட்சம் ஆண்டுகளுக்கு அழியாமல் அப்படியே இருக்கும்.

வியாழன் கிரகத்துக்கு மனிதன் சென்றால் அவனுடைய எடை அரை டன்னாக இருக்கும்.

வானவில்லின் நிறங்களில் நீல நிறம்தான் அதிகமான ஒளிச்சிதறல் அடைகிறது.


தென்னாப்பிரிக்காவில் உள்ள 'பச்சோடியம்' என்னும் செடி எப்பொழுதும் வட திசையை நோக்கிச் சாய்ந்தே காணப்படும். அதற்கு 'திசைகாட்டிச் செடி' என்ற பெயரும் உண்டு.

பிளாட்டினத்தை 'வெண் தங்கம்'

என்று அழைப்பார்கள்.

நகம் ஒரு தடித்த தோலேயாகும். இது கெரட்டின் என்கிற ப்ரோட்டினால் ஆனது.

- ஏ.எஸ்.யோகானந்தம், ஔவையார்பாளையம்







தமிழ்நாட்டில் அவ்வையாருக்கு பல இடங்களில் கோயில்கள் உள்ளன. ஆத்தூர் (சேலம் மாவட்டம்), துளசியாப் பட்டிணம் (நாகை மாவட்டம்), குற்றாலம் (செண்பகா தேவி அருவி அருகே), முப்பந்தல், நெல்லி மடம், தாழக்குடி பக்கம், குரத்தியரை (மூன்றும் குமரி மாவட்டம்), கல்வராயன் மலை (சேலம் மாவட்டம்)

- இரா.சு.பிரகாசம், சோமரசம்பேட்டை

உலகில் மிகப் பெரிய மலர் 'ரப் பிலேஷியர்'. இதற்கு நறுமணம் கிடையாது.

நாய்களைவிட பன்மடங்கு மோப்ப சக்தி கொண்டது விலாங்கு மீன்.

சீனப் பெருஞ் சுவரின் நீளம் 6400 கி.மீ. ஆகும்.

மணிக்கு 70 கி.மீ வேகத்தில் ஓடும் திறன் கொண்ட பறவை நெருப்புக் கோழி ஆகும்.

மின் காந்தங்கள் செய்யப் பயன்படுத்தும் இரும்பு - தேனிரும்பு.

கடலின் ஆழத்தைக் கணக்கிட உதவும் கருவி - சோனார்

ஓசோன் படலம், பூமியிலிருந்து 30 கி.மீ. உயரத்தில் உள்ளது.

அச்சு எழுத்துக்களின் வெளியான முதல் இந்திய மொழி - தமிழ்.

- பா. விக்னேசுவரன், குட்டம்

பூவின் விருப்பம்!

கதை : ஏ. ஆண்ட்ரில், ஏழாம் வகுப்பு, சாரதா மெட்ரிக். பள்ளி, செஞ்சி. ஓவியம் : பிள்ளை




சுட்டீஸ் கைவண்ணம்!

மீரா சிவராமகிருஷ்ணன்,
உறுப்பினர் எண்: 697




எல். அப்ரின் சுல்தான்,
இரண்டாம் வகுப்பு, செஞ்சி



ஆர். அக்ஷரா,
ஐந்தாம் வகுப்பு, சுமைதாங்கி




ஆர்.ஸ்ரீ. விஷ்ணு பிரதிபா லக்ஷ்மி,
மூன்றாம் வகுப்பு, இராஜபாளையம்



எஸ். வர்ஷினி,
உறுப்பினர் எண். 840, சென்னை





ஏ.எஸ். ஐஸ்வர்யா,
ஐந்தாம் வகுப்பு, சென்னை

மனிதமுக மீன்

தென்கொரியா நாட்டிலுள்ள 'சாங்கு' நகரத்தில் பேசப்படுகின்ற பரபரப்பான பேச்சு 'மனித முக மீன்'தான். உயர் கலப்பின வகையான இந்த மீன் டேன்ஜரின் மீன் (tangerine fish) என அழைக்கப்படுகின்றது. இந்த மீனின் தலையிலுள்ள இரண்டு கோடுகள் மற்றும் புள்ளிகளால் அதன் கண்கள், மனிதக் கண்களைப் போலத் தோற்றம் தருகின்றன. மனித முக மீனின் நீளம் மூன்றடிக்குக் கூடுதலாகவும், சுற்றளவு சுமார் இரண்டடியாகவும் உள்ளது. சாங்கு நகரத்தில் ஒரு குளத்தில் 1986 ஆம் ஆண்டு முதல் இந்த வகை மீன் இருந்தாலும், தற்போதுதான் மிகுந்த முக்கியத்துவம் பெற்றுள்ளது. 64 வயதான தென் கொரிய முதியவர் ஒருவர், 'நீண்ட நாட்களாக இந்த வகை மீன்கள் இருக்கின்றன; ஆனால், ஒரு சில ஆண்டுகளாகத்தான் மனிதமுக மீனாக மாறி வருகின்றது' எனக் கூறுகின்றார். (பக்கத்தில் இருக்கிறவங்களைப் பார்க்காதீங்க!)

உங்களைப் போன்றே ரோபோ:

அழகாக அச்சு அசலாக, உங்கள் முகத் தோற்றத்துடன் ரோபோ வேண்டுமா? ஜப்பானிய பொம்மை தயாரிப்பு நிறுவனம் செய்து கொடுக்கத் தயாராக இருக்கின்றது. இதற்கு 'ரோபோ மினி - மெஸ்' (Robot Mini - Mes) எனப் பெயரிட்டுள்ளனர். 'லிட்டில் ஐலேண்ட்' எனப்படும் ரோபோ பொம்மை தயாரிக்கும் நிறுவனம் நம்மைப் போன்ற முகம், குரல் கொண்ட சிறிய ரோபோக்களைத் தயாரிக்கும் பணியில் இறங்கியுள்ளது. நம் புகைப்படத்துடன், குரலையும் தனியாகப் பதிவு செய்து அனுப்பி வைத்தால் போதும்; அடுத்த ஆறாவது மாதத்தில் நம் வீடு தேடி, நம் முகத் தோற்றத்துடன் குட்டி ரோபோ வந்து பேசத் தொடங்கிவிடுவார். குரல் பதிவு என்பது மைக்ரோஃபோன் மற்றும் குரல் புரிந்து கொள்ளும் கணினி மென்பொருள் வாயிலாகப் பதிவு செய்யப்படுகிறது. (என்ன குட்டீஸ்.... 'லிட்டில் ஐலேண்டு'க்கு





டால்ஃபினுக்கு டயட்!

போட்டோவை அனுப்பிட லாமா?)

டயட்டிங்...

யாருக்கு இந்த உணவுக்கட்டுப் பாடுன்னு யோசிக்கிறீங்களா? ஜப்பான்





'சினோசகி மெரைன் வோர்ல்ட்'-ல் உள்ள டால்ஃபின் மீன்களுக்குத்தான். சுமார் 19 டால்ஃபின்கள் மீன்களின் வயிறுகள் பானை போல ஆகிவிட்டன; 22 பவுண்ட்கள் வரை எடை அதிகரித்து விட்டது' என மீன் கண்காட்சி நிலைய ஊழியர்கள் தெரிவித்துள்ளனர். இவற்றுக்கு 31 பவுண்ட் மெக்கரல் உணவை, வெள்ளை மீன் கலந்து கொடுக்கின்றனர். இந்த மெக்கரல் உணவால் டால்ஃபின் மீன்களின் உடலில் கொழுப்புச் சத்து அதிகமாகி விட்டதாம். எனவே, டால்ஃபின்களுக்கு உடல் எடை குறைக்கும் பயிற்சி வழங்கப் படுகிறது. (டால்ஃபின்கள் அடம் பிடிச்சாலும் அவற்றுக்கு கேக் கொடுக்கக் கூடாது... அப்போ உங்களுக்கு?)

19 வயதுப் பேராசிரியை

உலகின் மிக இளம் வயதுப் பேராசிரியையாக 19 வயது நிரம்பிய அலியா சாபுர் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். 'முழு நேரப் பேராசிரியையாகத் திகழ்கிறார்' என கின்னஸ் உலகச் சாதனைப் புத்தகம் தெரிவித்துள்ளது. ஒன்பது வயதில் கராத்தே போட்டியில் பிளாக்பெல்ட் பெற்ற இவர், பத்து வயதில் அமெரிக்காவின் ஸ்டோனி புருக்கில் உள்ள பல்கலைக் கழகத்தில் மாணவியாகச் சேர்ந்தார். ராக்லேண்ட் சிம்பொனி ஆர்கெஸ்ட்ராவில் பதினொரு வயதில் கிளாரினட் இசைக் கருவியை இசைத்தார். 14 வயதில் இளங்கலை பட்டப் படிப்பை முடித்தார். 2006ஆம் ஆண்டில் டிரெக்சல் பல்கலைக்கழகத்தில் எம்.எஸ். பட்டம் பெற்றார். சீயோல் நகரில் உள்ள கல்லூரியில் இயற்பியல் மற்றும் கணிதப் பாடங்களை நடத்துகின்றார். தற்போது சீயோலில் உள்ள கோன்கு பல்கலைக்கழகத்தில் பேராசிரியையாகவும் வலம் வருகின்றார். (நாம எத்தனை நாள்தான் இப்படியே ஸ்டூடண்டா இருக்கிறது? பேசாம... டீச்சர் ஆகியிடலாமா?

முனைவர் ஆசுரா

நெடுங்கவிதை



எங்கள் தோட்டம்!

தோட்டம் எங்கள் தோட்டமாம்
  தூய்மை யான தோட்டமாம்
பாட்டுப் பாடி வண்டுகள்
  பறந்து திரியும் தோட்டமாம்

சின்னச் சின்ன மலர்களைத்
  தென்றல் ஆட்டும் தோட்டமாம்
வண்ண வண்ண மலர்களின்
  மணம்ப ரப்பும் தோட்டமாம்

புள்ளி மானும் பூனையும்
  புல்லைத் தின்னும் முயல்களும்
துள்ளித் திரியும் தோட்டமாம்
  சொகுசு மிக்க தோட்டமாம்

தத்திச் செல்லும் தவளையும்
  தாவி ஏறும் அணில்களும்
வித்தில் லாத வாழையும்
  மிகுந்த எங்கள் தோட்டமாம்.

மாடி வீடு போலவே
  மரத்தின் உச்சிக் கிளைகளில்
கூடு கட்டிப் பறவைகள்
  கொஞ்சி வாழும் தோட்டமாம்

செல்ல மாக எங்களால்
  தென்னை யோடு மாமரம்
முல்லை மல்லி யாவையும்
  முளைக்க வைத்த
    தோட்டமாம்.

அல்லி யோடு தாமரை
  அழகு செய்யும் குளங்களும்
உள்ள தெங்கள் உவமைநேர்
  ஒன்றில் லாத தோட்டமே.

சாரதிதாசன்



'யார் பலசாலி?' படக்கதை 'வல்லவனுக்கு வல்லவன் வையகத்தில் உண்டு' என்ற நீதியை விளக்கியது.

- ப. சண்முகப்ரியா, மன்னார்குடி

'படகு மேல் தண்ணீர் போனால் கைலாசம்?' என்பது 'கடி'யின் 'முடி' ஆம்; உச்சாணி!

- ஆர்.ஆர்.உமா, செல்வமருதூர்

'மரத்தில் விழுந்த துளை' சிறுகதை கோபத்தால் விளையும் தீமைகளை எடுத்துரைத்தது.

- ஆ. ராஜேஷ், சேலம்

'மரபியலின் தந்தை' கிரிகோர் ஜோஹன்மெண்டல் பட்டாணிச் செடிகளின் மூலம் அறிவியலின் பரிமாணத்தை உணர்த்திய விதம் பிரமாதம்!

- ச.ஆ. கேசவன், இனாம் மணியாச்சி

'தேர்வச்சம்' என்ற தலைப்பில் வந்துள்ள 'புதுக்குரல்கள்'; சுற்றுலா பற்றிய செய்திகள், கதைகள் எல்லாம் அருமை.

- பி. சர்வேஸ்வரன், உ.எண்: 456, பொன்மேனி

தலைவலி வருவது ஏன்? என்பதற்கான காரணங்களை விரிவாகக் கூறியதோடு, தலைவலியைத் தவிர்க்கும் வழிகளையும் கூறியது அனைவருக்கும் பயன்படும் விதத்தில் இருந்தது.

- ஆர். மதுமதி, மதுரை

தேர்வு நேரத்தில் மிகச் சரியாக வெளியாகியிருந்தது 'ஜெயிப்பது நிஜம்' கட்டுரை.

- கோ. மஞ்சரி, ஏ.ஆர்.ஜி. நர்சரி அண்ட் பிரைமரி பள்ளி, கிருஷ்ணகிரி

ஏ.ஆர். ரஹ்மான் விருதுகளைப் பெற முயற்சி எடுத்துக்கொண்ட , அதை இந்தியாவுக்குப் பெருமை சேர்க்கும் வகையில் சாதித்தது சாதனையே!

- டி.எம். முருகானந்தம், திருவைகாவூர்

'அமைதி இல்லாத பசிபிக்' பெருங்கடலின் அழகையும் ஆபத்தையும் அழகாய் படம் பிடித்து காட்டி உள்ளீர்கள். படிக்க படிக்கப் பரவசமாய் இருந்தது.

- எம்.சி. பூபதி

'இலவசம் வேண்டாம்' கதை படித்தேன். ஒன்றுக்கு ஒன்று இலவசம் என்றால் ஏமாந்து விடக் கூடாது என்று எச்சரித்தது.

- எம். சிவரஞ்சனி, உ. எண். 179, வலங்கைமான்



'கடி'யின் முடி!

வெற்றியாளர்களை அடையாளம் காட்டி 'வெற்றியின் வழி' என்று தலைப்பினைத் தந்து தலையங்கம் கண்ட கோகுலின் அட்வைஸ் வெரி நைஸ்!

- ஆர்.ஜி. காயத்ரி, திசையன்விளை

விவேகானந்தர், நியூட்டன், கஸ்தூரிபா காந்தி பற்றிய தகவல்களை விளக்கிய 'சம்பவம்' பகுதி அருமை.

- ஆர். விஜயா ரவி, ஈரோடு

அ.வி.சூர்யதீபன், இ.எஸ். மெட்ரிக் மே.நி.பள்ளி

டைனோசர் உலகம்!

ஆச்சர்யமும், அதிர்ச்சியும் தரக்கூடிய விலங்கு டைனோசர். 'ஜுராசிக் பார்க்' படத்தில், டைனோசர் அடித்த லூட்டிகளையும், பயங்கரத்தையும் எளிதில் மறந்துவிட முடியாது. அப்படியொரு விலங்கு வாழ்ந்தது என்பதற்கான தடயங்கள் இருக்கின்றனவே தவிர, அவை அழிந்ததற்கான காரணங்களை இன்று வரை ஆய்வாளர்களால் நிறுவ முடியவில்லை.

இவை வாழ்ந்த காலத்தை Mesokic era என்று குறிப்பிடுகின்றனர். அதாவது 245 மில்லியன் ஆண்டுகளுக்கு முன் இவை வாழ்ந்ததாகக் கருதுகின்றனர். இவை நீண்ட கால்களை உடையவை. இதன்மூலம் இவற்றின் உடல்கள் தூக்கி நிறுத்தப்படுகிறது. இதன் கழுத்தெலும்பு மற்றும் இடுப்பெலும்பு அவற்றின் அமைப்பிற்கேற்ப பொருத்தப்பட்டுள்ளதால் அது எளிதில் எழுந்து ஓட முடிகிறது. இடுப்பு எலும்பைக் கொண்டு டைனோசரை இரண்டு வகையாகப் பார்க்கிறார்கள். ஒன்று பறவை இடுப்பு கொண்டவை (Ornitaischaian), மற்றது பல்லி இடுப்பு கொண்டவை (Sauriscaian), இவற்றில் பல வகைகள் இருந்திருக்கின்றன. குறிப்பாக டைனசெளரியா (Dinasauria) என்பது நில வாழ்வோடு ஒன்றிய வகையாகக் கருதப்படுகிறது.

இவை வாழ்ந்த காலத்தை டிரையசிக் காலம் (Triassic Period), ஜுராசிக் காலம் (Juraasic Period), க்ரிடேசியஸ் காலம் (Cretaceous Peroiod) என்று மூன்றாகப் பிரிக்கின்றனர்.

டிரையசிக் காலத்தில் இருந்த டைனோசர்கள் தாவரங்களை உண்டு வாழ்ந்ததாகக் கருதப்படுகிறது. இந்தக் காலத்தில் பூமி கண்டங்களாகப் பிரிந்திருக்கவில்லை என்பது ஆய்வாளர்களின் கருத்து.

இரண்டவாது காலத்தில் பூமி கண்டங்களாகப் பிரிந்திருந்தது.





இந்தக் காலத்தில் தாவரங்களை உணவாகக் கொண்ட டைனோசர்கள் மட்டுமல்ல; மாமிசம் உண்ணும் டைனோசர்களும் வாழ்ந்திருந்தன. பிற உயிரினங்களும், பாலுட்டிகளும் தோன்றிய காலமாக இதைக் கருதுகின்றனர்.

மூன்றாவது காலத்தைத்தான் டைனோசர்களின் இறுதிக்காலம் என்று சொல்கிறார்கள்.

தட்பவெப்ப நிலை மாற்றங்கள்; காடுகளின் வளர்ச்சி; பூமியின் பரப்பில் ஏற்பட்ட மாற்றங்களின் விளைவாக பறக்கும் தன்மை கொண்ட டைனோசர்கள் வரை தோன்றியுள்ளன.

மற்ற விலங்குகளை அச்சப்படுத்தும் அளவில் வாழ்ந்த டைனோசர்கள், மற்ற விலங்குகளை உணவாகக் கொண்டும், பறந்தும் வாழ்ந்த டைனோசர்கள் எப்படி மறைந்தன என்பதை இன்றுவரை ஊர்ஜிதமாகச் சொல்ல முடியவில்லை.

பூமியின் வெப்ப நிலை மாற்றம், எரிமலைகளின் சீற்றம், எரிநட்சத்திரங்களின் தாக்குதல்... போன்றவற்றால் இவை அழிந்திருக்கலாம் என்று கருதப்படுகிறது. டினோசர்களின் தோற்றம் முதல் அழிவு வரை எல்லாமே இன்று ஆராயப்பட்டு வருகின்றன. என்றாலும், படிக்கப் படிக்க உற்சாகம் ஏற்படுவதென்னவோ உண்மை தான்! ●



விடையைச் சொல்; பரிசை வெல் - 22

1. தவளையைப் பற்றி படிக்கும் படிப்பின் பெயர் ....

2. கண்ணீரைச் சுரக்கும் சுரப்பி ....

3. சிரிப்பதற்கு உதவும் தசைகளின் எண்ணிக்கை ....

4. அலியா சாபுர் பணிபுரிந்து வரும் பல்கலைக் கழகம் ....

5. பேட்ரா என்ற சொல்லின் பொருள்..

என் பெயர் : ....

வகுப்பு, பள்ளி : ....


: ....

வீட்டு முகவரி : ....

....

பின்கோடு ....

போட்டி



பரிசு ரூபாய் 1000/-

இங்கே ஐந்து கேள்விகள் கேட்கப்பட்டுள்ளன. விடைகளை நீங்கள் எங்கும் தேடிச் செல்ல வேண்டாம். இதே இதழில்தான் உள்ளன. அவற்றைக் கண்டுபிடித்து எழுதுங்கள். கூப்பனையும் பூர்த்தி செய்து இந்தப் பக்கத்தைக் கத்தரித்து அனுப்புங்கள். ஆசிரியர் தீர்ப்பே இறுதி.

முடிவு தேதி : 10.5.2009

அனுப்ப வேண்டிய முகவரி:

ஆசிரியர், கோகுலம், (பரிசுப் போட்டி)
47-NP, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காட்டுதாங்கல்,
சென்னை - 32

கோகுலம் சிறுவர் சங்கம்

உறுப்பினர்கள்


976


977


978


979



980


981


982



983


984


985


986



987



988


989


990


991


992


993


994


995


996


997


998


999


1000

பெயர் மற்றும் விவரங்கள் 57 ஆம் பக்கம்



Registered with the Registrar of Newspaper of India under No. 24280/72 Registered No. TN/CC(S)DN/109/09-11 • Licensed to post without prepayment under PMG's Licence No. WPP TN/CC(S)DN/47/09-11 • Registered as a Newspaper in Srilanka